# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 10850 / 2013 / எம்சி. 8 நாள் : 12.11.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **14.11.2013** வியாழக்கிழமை மாலை **4.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - நவம்பர் 2013

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல் | |
| ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | Jnnurm – எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த கோயம்புத்துார் மாநகராட்சி பகுதிகளில் 24x7 குடிநீா் திட்டத்தின் மூலம் 24 மணி நேரமும் குடிநீா் விநியோகம் செய்தல் - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது – மத்திய நகா்புற வளா்ச்சித்துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது - ரூ.451.66 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துதல் - மாநில அரசின் நிா்வாக அனுமதி பெற மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - தமிழ்நாடு நகர்புர வளர்ச்சி நிதி நிறுவன (TNUDF) சாலைப் பணிகள்– **20** சிப்பங்களின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது –ஒப்பந்தப் புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக. |
| 3 | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 73 – அரசு மருத்துவமனை அருகே தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல் -ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 64 – சிங்காநல்லுார் பேருந்து நிலையில் அருகில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 5 | பொது கணக்குப்பிரிவு – இணையதளம் வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்துதல் – வங்கிகளுக்கு அனுமதி வழங்குதல்–மாமன்ற ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக. |
| 6 | நகரமைப்பு – சிறைத்துறைக்கு சொந்தமான இடத்தில் செம்மொழி பூங்கா அமைக்க பெறப்பட்ட அரசாணையில் நில மாற்று உபயோகம் - **5.63** ஏக்கர் இடத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் அமைக்க அனுமதி வழங்க கோரியது – குத்தகை தொகை நிர்ணயம் செய்தல் – மாமன்றம் முடிவு செய்தல் தொடர்பாக |
| 7 | நகரமைப்பு பிரிவு – இரயில்வே திட்டப்பணிகள் – இரயில்வே கடவுகள் உள்ள மாநகராட்சி சாலைகளில் மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ள நெடுஞ்சாலை துறைக்கு மாநகராட்சி சாலைகளை நிரந்தரமாக ஒப்படைப்பு செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | நகரமைப்பு பிரிவு - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இருந்து நேரு விளையாட்டு அரங்கத்தினை சுற்றியுள்ள கடைகளை மட்டும் மீண்டும் மாநகராட்சி வசம் ஒப்படைக்க கோரியது – நேரு விளையாட்டு அரங்கத்திற்கான குத்தகை காலம் மற்றும் தொகை உயர்த்துதல் – மாமன்றம் முடிவு செய்தல் தொடா்பாக |
| 9 | பணியமைப்பு – **23.04.2013**–ல் நியமனம் செய்யப்பட்ட இரண்டு உதவிப் பொறியாளர்கள் – பணி நியமன ஆணை ரத்து செய்தல்– மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 10 | பணியமைப்பு – செல்வி. ருக்குமணி, இளநிலை உதவியாளர், பல்லடம் நகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 11 | பணியமைப்பு – தவறான பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் திருமதி. யா. உஷாராணிக்கு, நிர்வாக அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டது – நிா்வாக அலுவலா் பதவி உயா்வினை ரத்து செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வாா்டு எண் 57 – உப்பிலிபாளையம் மசக்காளிபாளையம் பிரதான சாலையில் உள்ள பாலத்தை புதுப்பித்தல் பணி – மதிப்பீடு ரூ.70.50 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |

| | |
|---|---|
| 13 | பொறியியல் பிரிவு - டி.கே. மார்க்கெட், அண்ணா மார்க்கெட், எம்.ஜி.ஆர். மார்க்கெட் ஆகிய மூன்று காய்கறி சந்தைகளில் சேகரமாகும் காய்கறி கழிவுகளைக் கொண்டு பையோ மீத்தனேஷன் முறையில் மின்சாரம் தயாரித்தல் - ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – விலைப்புள்ளி குறைவாக கொடுத்திருந்த நிறுவனத்தினை தேர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | வருவாய் பிரிவு - சொத்துவரி – புதிய வரிவிதிப்புகள் / கூடுதல் கட்டிடங்கள் / உபயோக மாற்றம் செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள்- ஆய்வு செய்தல்- அனைத்து உதவி வருவாய் அலுலர்கள் மற்றும் வரிவசூலர்களுக்கு Tablet PC வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 15 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 1- துடியலூர் பகுதியில் உள்ள இரயில் நிலையத்தில் இரயிலை நிறுத்தி எடுத்து செல்ல தேவையான அடிப்படை வசதிகள் செய்தல் - திருத்திய செலவு தொகை ரூ.44,00,428/-ஐ மாநகராட்சி ஏற்றுக் கொள்வது - ஒப்புதல் கடிதம் வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - தற்சமயம் தெற்கு மண்டலம் மற்றும் மத்திய மண்டல பகுதிகளுக்குட்பட்ட 26 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காக்களை பராமரிப்பு செய்தல் - திருவாள்கள் திரிஷா ரோஸ் கார்டன் பிரைவேட் லிட் நிறுவனத்திற்கு 31.10.2013 வரை பராமரிப்பு செய்ய அனுமதி நீட்டிக்கப்பட்டது – புதிய ஒப்பந்ததாரர் பொறுப்பு ஏற்கும்வரை திருவாள்கள் திரிஷா ரோஸ் கார்டன் பிரைவேட் லிட் நிறுவனத்தினரே பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி அளித்தல் மற்றும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - தற்சமயம் கிழக்கு மண்டலம் மற்றும் தெற்கு மண்டல பகுதிகளுக்குட்பட்ட 30 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காக்களை பராமரிப்பு செய்தல் - தி.ள் திரிஷா ரோஸ் கார்டன் பிரைவேட் லிட் நிறுவனத்திற்கு 31.10.2013 வரை பராமரிப்பு செய்ய அனுமதி நீட்டிக்கப்பட்டது – புதிய ஒப்பந்ததாரர் பொறுப்பு ஏற்கும்வரை தி.ள் திரிஷா ரோஸ் கார்டன் பிரைவேட் லிட் நிறுவனத்தினரே பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி அளித்தல் மற்றும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 18 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - தற்சமயம் மேற்கு மண்டலம் மற்றும் தெற்கு மண்டல பகுதிகளுக்குட்பட்ட 36 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காக்களை பராமரிப்பு செய்தல் - திருவாள்கள் திரிஷா ரோஸ் கார்டன் பிரைவேட் லிட் நிறுவனத்திற்கு 31.10.2013 வரை பராமரிப்பு செய்ய அனுமதி நீட்டிக்கப்பட்டது – புதிய ஒப்பந்ததாரர் பொறுப்பு ஏற்கும்வரை திருவாள்கள் திரிஷா ரோஸ் கார்டன் பிரைவேட் லிட் நிறுவனத்தினரே பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி அளித்தல் மற்றும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - தற்சமயம் வடக்கு மண்டலம் மற்றும் கிழக்கு மண்டலம் மற்றும் மத்திய மண்டல பகுதிகளுக்குட்பட்ட 24 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காக்களை பராமரிப்பு செய்தல் - திருவாள்கள் திரிஷா ரோஸ் கார்டன் பிரைவேட் லிட் நிறுவனத்திற்கு 31.10.2013 வரை பராமரிப்பு செய்ய அனுமதி நீட்டிக்கப்பட்டது – புதிய ஒப்பந்ததாரர் பொறுப்பு ஏற்கும்வரை திருவாள்கள் திரிஷா ரோஸ் கார்டன் பிரைவேட் லிட் நிறுவனத்தினரே பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி அளித்தல் மற்றும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | பொது சுகாதார பிரிவு - மாநகராட்சி எருதுகளை தனியார் மூலம் பாதுகாத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | பொது சுகாதாரப் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை – 5, 6 மற்றும் 7வது வார்டுகளில் சாக்கடைப் பணியாளர்களின் பணிகள் - தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டது – 31.07.2013 உடன் முடிவடைதல் - மேற்படி பணிக்காலம் 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்வது – மாமன்றத்தின் பின்னேற்பு பெறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை – 8 மற்றும் 9வது வார்டுகளில் சாக்கடைப் பணியாளர்களின் பணிகள் - தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டது – 31.07.2013 உடன் முடிவடைதல் - மேற்படி பணிக்காலம் 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்வது – மாமன்றத்தின் பின்னேற்பு பெறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 23 | நகரமைப்பு – வடக்கு மண்டலம் – வார்டு எண்.41க்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட காந்திமாநகர் மனைப்பிரிவில் சமுதாய கூடம் மற்றும் இடத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிர்ணயம் செய்த விற்பனை விலை ரூ.5,13,38,000/-க்கு மாநகராட்சி பெயரில் கிரயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| 24 | பொது சுகாதாரப் பிரிவு - பிரதான அலுவலக வளாகத்தில் அம்மா மூலிகை உணவகம் செயல்படுவதற்கு மேற்கொண்ட செலவினங்கள்- மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| 25 | பொது சுகாதாரப் பிரிவு - மாநகராட்சி காசநோய் மருந்தகங்கள் மற்றும் நகர் நல மையங்கள் - மருந்துகள் வாங்க வரும் காசநோயாளிகளுக்கு பால் , முட்டை அல்லது சுண்டல் வழங்குதல் - ஆண்டுக்கு ரூ. 14.40 இலட்சம் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | பொது சுகாதார பிரிவு- மாநகராட்சி நகர்நல மையங்களில் கர்ப்பகால பரிசோதனைக்கு வரும் தாய்மார்களுக்கு உடற்பயிற்சி வழங்க முடக்கு நீக்குவியல் (Physiotherapist) நிபுணர் ஒருவரை வாடகை அடிப்படையில் நியமனம் செய்தல் – மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக |
| 27 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 1 – துடியலூரில் கோயம்புத்தூர் மாநகராட்சியால் புதிதாக புனரமைக்கப்பட்ட நவீன எரியூட்டு மயானத்தினை பராமரித்தல் - தனியார் தொண்டு நிறுவனமான தி.ள். ஈஷா பவுண்டேசன், கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு அனுமதி வழங்குதல் - நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு சமர்ப்பித்தல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| 28 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பட்டம் பெற்று கீழ்நிலை பதவிகளில் பணியாற்றும் பணியாளர்களை – உதவிப் பொறியாளர் பணியிடத்தில் நேரடி நியமனம் மூலம் அரசின் உறுதியாக்கத்திற்குப்பட்டு நியமனம் செய்வது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 29 | Jnnurm -திடக்கழிவு மேலாண்மை – பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து மறு சுழற்சி மூலம் சுற்றுசூழக்கு ஏற்ற பொருட்கள் தயாரிப்பது தகுதி வாய்ந்த நிறுவனங்களை தேர்ந்தெடுக்க விருப்ப கேட்வு அறிக்கை பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் தொடர்பாக. |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

**(குறள் - 672)**

**விளக்கம்**

காலம் பார்த்துச் செய்ய வேண்டியவற்றை நிதானமாகவும், உடனடியாகச் செய்ய வேண்டியவற்றை விரைவாகவும் செய்து முடிக்க வேண்டும்.

**திருவள்ளுவர்**

------------------------------------------------------------------------------------

**ஆ)** **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் எண் 1**

தமிழக சட்டமன்றத்தில் அனைத்து கட்சிகளை சேர்ந்தவர்களாலும் ஏகமனதாக கொண்டுவரப்பட்ட இலங்கையில் நடக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது. இலங்கைத் தமிழர்கள், காப்பாற்றப்பட வேண்டும், உலகத் தமிழர்கள் காப்பாற்றப்பட வேண்டும், தமிழகத்திற்கான உரிமைகள் பெறப்படவேண்டும் என்று ஜனநாயக ரீதியாக மனித நேயமிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் போராடி வருகின்றார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் சிறப்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இந்திய நாடும், உலக நாடுகளும் உற்று நோக்குகின்ற அளவில் இருக்கிறது. தமிழகத்தின் உரிமைகளை பெறுவதில் முனைப்போடு ஜனநாயக ரீதியாக பாடுபட்டுக் கொண்டிருக்கிற மனித நேயமிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் எடுக்கக்கூடிய முயற்சிக்கு மாமன்றம் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 14.11.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

---

**சிறப்புத் தீர்மானம் எண் 2**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட 23 வது வார்டு பகுதியில் உள்ள பாரதி பார்க் பூங்காவின் சுற்றுச்சுவர் மிகவும் சிதிலமடைந்து உள்ள நிலையில் அந்த பகுதியில் காலையிலும் மாலையிலும் நடைபயிற்சி செய்து வரும் பொதுமக்கள் மேற்படி சுற்றுச்சுவரை சரிசெய்ய வேண்டும் என்று கோரி வருகிறார்கள்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் பொதுமக்களின் வரிப்பணத்தில் கட்டுப்பட்டுள்ள பாரதி பார்க் பூங்காவின் சுற்றுச்சுவரில் சில கட்சிகளின் சின்னங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

எனவே மாநகராட்சி கட்டிடங்கள், பூங்காக்கள் உள்ளிட்ட இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளின் சின்னங்கள், உயிரோடு இருக்கும் தலைவர்களின் படங்கள் போன்றவற்றை அகற்றவேண்டும். மேலும் தெருக்களின் பெயர்களில் உயிரோடு இருக்கும் தலைவர்களின் பெயர்களை அகற்றவேண்டும். அதற்கு மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிறப்புத்தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 23-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். மணிமேகலை அவர்களால் வழிமொழியப்பட்டு தெற்கு மண்டல தலைவர் திரு எம். பெருமாள்சாமி அவர்களால் முன்மொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 14.11.2013**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

---

**பொருள் எண் 1**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள பில்லூர் இரண்டாவது தனிக் குடிநீர் திட்டத்தின் மூலம் மாநகராட்சியால் பெறப்படவுள்ள 125 எம்.எல்.டி. குடிநீர் மற்றும் சிறுவாணி குடிநீர் திட்டம் மூலம் பெறப்படும் 75 எம்.எல்.டி குடிநீர் மொத்தம் 200 எம்.எல்.டி. குடிநீரினை பயன்படுத்தி, எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக அமைப்பினை அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு பணிகள் செய்து (Improving & revamping the existing proposed water supply scheme with continuous 24 x 7 pressured water supply) 24 மணி நேரமும் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு **"24 x 7 குடிநீர் திட்டத்தினை"** ரூ. 595.24 கோடி மதிப்பில் செயல்படுத்த தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து முழு மானியமாகவோ அல்லது அரசால் ஒதுக்கப்படும் மானிய நிதியுடன் மாநகராட்சி பங்கு நிதியினை பயன்படுத்தி திட்டத்தினை செயல்படுத்த மாமன்றம் தனது தீர்மான எண் 157. நாள் 30.11.2011–ல் ஒப்புதல் வழங்கியதையடுத்து, மேற்படி விரிவான திட்ட அறிக்கை மாநில அரசின் ஒப்புதல் பெறும்பொருட்டு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது.

பல்வேறு கூராய்வுகளுக்குப் பின் மேற்படி விரிவான திட்ட அறிக்கையின் மதிப்பீடு ரூ. 496.85 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டு மாநில அளவிலான கண்காணிப்பு குழுவின் (State Level Steering Committee) ஒப்புதல் கடந்த 12.08.2013அன்று பெறப்பட்டது.

மாநில அளவிலான கண்காணிப்பு குழுவின் பரிந்துரையோடு மேற்படி விரிவான திட்ட அறிக்கை மத்திய நகர்புர வளர்ச்சித் துறையில் கூராய்வு செய்து "ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு (Central Sanctioning & Monitoring Committee)"வின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதில், கடந்த 28.10.2013 அன்று நடந்த 128 வது குழு கூட்டத்தில் மேற்படி திட்டத்தினை ரூ. 451.66 கோடி மதிப்பில் கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| மத்திய அரசின் மானிய நிதி (50%) | – | ரூ. 225.83 கோடி |
| மாநில அரசின் பங்கு தொகை (20%) | – | ரூ. 90.33 கோடி |
| மாநகராட்சியின் பங்கு நிதி (30%) | – | ரூ. 135.50 கோடி |
| மொத்தம் | – | ரூ. 451.66 கோடி |

இந்நிலையில் மேற்படி திட்டத்தினை செயல்படுத்த மாநில அரசின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு தேவையான முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக அரசிற்கு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> அ) மத்திய நகர்புர வளர்ச்சிச் துறையின் "ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு"வின் 128வது குழு கூட்டத்தில் எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு பணிகள் செய்து (Improving & revamping the existing proposed water supply scheme with continuous 24 x 7 pressured water supply) 24 x 7 குடிநீர் விநியோக திட்டத்தினை ரூ. 451.66 கோடி மதிப்பில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டதினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) மேற்படி திட்டத்தினை செயல்படுத்த மாநில அரசின் நிர்வாக அனுமதி கோரும் முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசிற்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) மேற்படி திட்டப் பணிகளை மேற்கொள்ளும்போது திட்டப்பணிகளை "திட்ட செயலாக்க கலந்தாலோசக நிறுவனம் (Project Management Consultancy)" ஒன்றினை நியமித்து பணிகளை கண்காணிக்க மாநில அளவிலான கண்காணிப்பு குழு (State Level Steering Committee) அறிவுறுத்தியனை ஏற்று "திட்ட செயலாக்க கலந்தாலோசக நிறுவனம் (Project Management Consultancy)" நியமிக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஈ) மேற்படி குடிநீர் திட்ட பணிக்கான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசின் மானியம் மற்றும் மாநில அரசின் பங்குத்தொகை போக மீதமுள்ள மாநகராட்சியின பங்குத்தொகை ரூ. 135.50 கோடியினை மாநகராட்சியின் பொது நிதி மற்றும் குடிநீர் விநியோக நிதியிலிருந்தோ அல்லது மாநில அரசின் மானியம் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றோ மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 2896.08.ஜே.என்5

## மாநகர மன்ற தீர்மானம் எண் 267 நாள் 14.11.2013

அலுவலகக் குறிப்பு அ பதிவு செய்யப்பட்டது. ஆ, இ, மற்றும் ஈ-க்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - தமிழ்நாடு நகர் புர வளர்ச்சி நிதி நிறுவன (TNUDF) சாலைப்பணிகளுக்கு 20 சிப்பங்களின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை:
1. நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை எண்.225, நாள்.05.09.2012
2. மாமன்ற தீர்மானம் எண்.42 நாள்.25.4.2013
3. நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை எண்.419,நாள்26.07.2013

-------

மேற்காண் பார்வை 2ல் கண்ட மாமன்றத் தீர்மானத்தின்படி கீழ் கண்ட சாலைகளில் தார்தளம் அமைக்க சிப்பம் 1 முதல் 20 பணிகளுக்கு கடந்த 4.10.2013ல் உறை/மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்கள். அதன் விபரம் பின்வருமாறு:

சிப்பம் 1 **(ந.க.எண்:6719/2013/எ□டி.3)**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□ |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 56 க்குட்பட்ட பாலசுப்ரமணியாநகர், அண்ணா நகர் பிரதான மற்றும் குறுக்கு சாலைகள் மற்றும் வார்டு எண் 64க்குட்பட்ட பிருந்தாவன் காலனி, சீனிவாசா நகர், செல்லாண்டியம்மன் நகர் பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | 262.3 | 1.தி/ள்.எஸ்.ஆர்.எ.& கம்பெனி கோயம்புத்தூர் 4.92%அதிகம்<br><br>2.திரு.என்.தங்கவேல், பல்லடம் 9.48% அதிகம் | தி/ள்.எஸ்.ஆர்.எ.& கம்பெனி கோயம்புத்தூர் 4.92%அதிகம் |

சிப்பம் 2 **(ந.க.எண்:6720/2013/எ□டி.3)**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□ |
|---|---|---|---|---|
| 2 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 66க்குட்பட்ட ஆண்டாள் லே அவுட், ஐயர் மருத்துவமனை சாலை எம்.ஜி.ஆர் நகர், பி.ஆர் நகர், கோத்தாரி லே அவுட், கிருஷ்ணா காலனி மற்றும் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல் | 222.00 | 1.திரு.ஆர் சுந்தரராஜன், கோயம்புத்தூர் 4.88% அதிகம்<br><br>2.திரு.கே.நடராஜன், கோயம்புத்தூர் 5.94% அதிகம் | திரு.ஆர் சுந்தரராஜன், கோயம்புத்தூர் 4.88% அதிகம் |

சிப்பம் 3 **(ந.க.எண்:6721/2013/எ□டி.3)**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□ |
|---|---|---|---|---|
| 3 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 66க்குட்பட்ட ஹிந்துஸ்தான் அவென்யூ, ராஜா நகர் சிவானி நகர், ராஜேஸ்வரி நகர், சின்னய்யாவு லே அவுட், வசந்தா நகர் மற்றும் கன்னபிரான் மில் ரோடு பகுதியில் தார் தளம் அமைத்தல் | 233.00 | 1.தி/ள்.ஜெயம் கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் 4.92% அதிகம்<br><br>2.திரு.அம்மாசையப்பன், கோயம்புத்தூர் 5.49% அதிகம் | தி/ள்.ஜெயம் கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் 4.92% அதிகம் |

சிப்பம் 4 (**ந.க.எண்:6722/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப்□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப்□ததார□ |
|---|---|---|---|---|
| 4 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 67க்குட்பட்ட டி நகர் சாலை, பாலாஜி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை, சௌரிபாளையம் சாலை முதல் திருச்சி சாலை சங்கனூர் பள்ளம் வரை உள்ள பகுதிகள் மற்றும் வார்டு எண்57க்குட்பட்ட ஏஜே.ஜி நகர் மெயின் ரோடு, ஏஜே.ஜி நகர் 1,2,3 முருகன் நகர், ஆண்டாள் நகர் மற்றும் வார்டு எண்56க்குட்பட்ட ஈவே.ரா பெரியார் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | 255.3 | 1.தி/ள்.ஸ்ரீமுத்துலட்சுமி &கோ பொள்ளாச்சி 7.92% அதிகம்<br><br>2.திரு.எ.அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 4.88% அதிகம் | திரு.எ.அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 4.88% அதிகம் |

சிப்பம் 5 (**ந.க.எண்:6723/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப்□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப்□ததார□ |
|---|---|---|---|---|
| 5 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75க்குட்பட்ட பாரதிதாசன் நகர், நேதாஜி நகர் குறுக்கு சாலை,பிஸ்மி நகர்,இலாஹி நகர், ரமலான் நகர்,நானியார் நகர், ஃபாதிமா நகர், சலாமுத் நகர் மற்றும் வள்ளல் நகர் பகுதியில் தார் தளம் அமைத்தல் | 251.35 | 1.திருமதி.சரோஜினி, கோயம்புத்தூர் 7.75% அதிகம்<br><br>2.திரு.கே.நடராஜன், கோயம்புத்தூர் 4.91% அதிகம் | திரு.கே.நடராஜன், கோயம்புத்தூர் 4.91% அதிகம் |

சிப்பம் 6 (**ந.க.எண்:6724/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப்□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப்□ததார□ |
|---|---|---|---|---|
| 6 | மேற்கு மண்டலம் வார்டு எண் 10க்குட்பட்ட சின்னசுப்பண்ணன் வீதி, அருணாசலம் வீதி, கே.எஸ்.ராமசாமி வீதி, எம்.எ.பழனிசாமி வீதி பகுதி, வார்டு எண்11க்கு உட்பட்ட பாலசுப்ரமணியன் வீதி பிரதான மற்றும் குறுக்கு சாலை பகுதி,வார்டு எண்13க்குட்பட்ட வசந்தா நகர், அம்மன் கோயில் வீதி, கே.கே.புதூர் பிரதான சாலை (ராமலிங்கம் நகர் 3வது குறுக்கு சாலை மற்றும் தடாகம் சாலைகளில்) பகுதி, வார்டு எண்14க்குட்பட்ட மணியகார சந்து மற்றும் பொங்காலியம்மன் கோயில் வீதி, வார்டு எண்15க்குட்பட்ட ராஜேந்திர பிரசாத் வீதி மற்றும் சம்பத் வீதி பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 253.20 | 1.திரு.ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 4.91% அதிகம்<br><br>2.தி/ள்.அபி அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 7.48% அதிகம் | திரு.ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 4.91% அதிகம் |

<u>சிப்பம் 7 (**ந.க.எண்:6725/2013/எ□டி.3**)</u>

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **7** | மேற்கு மண்டலம் வார்டு எண் **20**க்குட்பட்ட கோபால் தோட்ட்ம், என்.ஆர்.ஜி வீதி,நேருநஜி வீதி மற்றும் எஸ்.எம்.மருதாசலம் வீதி **1** மற்றும் **2**, ராதாகிருஷ்ணன் வீதி மற்றும் லட்சுமி நகர், வார்டு எண் **21**க்குட்பட்ட பனைமரத்தூர் பகுதி, கோகுலம் காலனி **3** மற்றும் **4** குறுக்கு சாலைகள் வார்டு எண் **14**க்குட்பட்ட சாஸ்திரி வீதியில் தடாகம் சாலை முதல் மேற்காக மற்றும் தவசி நகர் சாலை பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | **284.55** | **1.**தி/எ்.கே.ஜி லட்சுமிபதி&கோ கோயம்புத்தூர் 4.94% அதிகம்<br><br>**2.**திரு.எ.வெங்கடாசலம் கோயம்புத்தூர் 8.86% அதிகம் | தி/எ்.கே.ஜி லட்சுமிபதி&கோ கோயம்புத்தூர் 4.94% அதிகம் |

<u>சிப்பம் 8 (**ந.க.எண்:6726/2013/எ□டி.3**)</u>

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **8** | மேற்கு மண்டலம் வார்டு எண் **15**க்கு உட்பட்ட தாகூர் வீதி, பி.என் புதூர் வீதிகள்,இந்திராகாந்தி வீதி, என்.ஜி.ஆர் வீதி, சாஸ்திரி வீதி, ராதிகா அவென்யூ குறுக்கு சாலைகள், ஐஸ்வரியா நகர், பொன்னுசாமி நகர் சாலைகள் மற்றும் வார்டு எண் **20**க்குட்பட்ட சுகர்கேன் பிரதான சாலையில் மருதமலை சாலை முதல் சுண்டப்பானளயம் சாலை வரை மற்றும் அண்ணா நகர் சாலை, என்.எஸ்.ஆர் சாலையில் தடாகம் சாலை முதல் கிழக்காக உள்ள பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | **257.15** | **1.**தி/எ்.ஸ்ரீமுத்துலட்சுமி &கோ பொள்ளாச்சி 11.18% அதிகம்<br><br>**2.**திரு. எ.அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 4.97% அதிகம் | திரு. எ.அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 4.97% அதிகம் |

<u>சிப்பம் 9 (**ந.க.எண்:6727/2013/எ□டி.3**)</u>

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **9** | தெற்கு மண்டலம் வார்டு எண் **76**க்கு உட்பட்ட மீனாட்சி நகர், பனைமரத்தூர் பகுதிகள், வார்டு எண் 77 க்குட்பட்ட என்.எஸ்.கே. வீதி. சோழன் நகர், ராம மூர்த்தி ரோடு இணைப்புச் சாலை, அருள் கார்டன் பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | **244.90** | **1.**தி/எ்.ராபர்ட்ராஜ் பிரைவேட் லிமிட்டேட் 4.96% அதிகம்<br><br>**2.**தி/எ்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 10.14% அதிகம் | தி/எ்.ராபர்ட்ராஜ் பிரைவேட் லிமிட்டேட் 4.96% அதிகம் |

சிப்பம் 10 (ந.க.எண்:6728/2013/எ□டி.3)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□ |
|---|---|---|---|---|
| 10 | தெற்கு மண்டலம் வார்டு எண் 77க்கு உட்பட்ட ஸ்ரீ நகர், எஸ்.ஆர்.எஸ் லே அவுட், பழனிசாமி காலனி 2வது வீதி, சண்முகராஜாபுரம், வேலப்பகவுண்டர் தோட்டம் ஆரங்கநாயகம் லே அவுட், வள்ளியம்மை நகர், ராஜன் தோட்டம், கோனார் தோட்டம் ரங்கசாமி காலனி மற்றும் வார்டு எண் 78 க்குட்பட்ட ராஜரத்தினம் கார்டன் மற்றும் சந்திரசேகரா புரம் பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | **259.20** | **1.**தி/ள்.ராபர்ட்ராஜ் பிரைவேட் லிமிட்டேட் 11.21% அதிகம்<br><br>**2.**தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.98% அதிகம் | தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 4.98% அதிகம் |

சிப்பம் 11 (ந.க.எண்:6729/2013/எ□டி.3)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□ |
|---|---|---|---|---|
| 11 | தெற்கு மண்டலம் வார்டு எண் 78க்கு உட்பட்ட வடக்கு வீட்டு வசதி குடியிருப்பில், மற்றும் வார்டு எண் 79 க்குட்பட்ட பிருந்தா லே அவுட், பொன்னுசாமி லே அவுட், கிருஷ்ணசாமி லே அவுட், கௌரி ஆண்டவர் லே அவுட், மற்றும் நஞ்சுண்டாபுரம் மற்றும் வார்டு எண் 86 க்குட்பட்ட அன்பு நகர் பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | 268.30 | **1.**தி/ள்.எம்.சரவணா கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் 4.95% அதிகம்<br><br>**2.**தி/ள்.மல்லையன் பில்டர்ஸ் கோயம்புத்தூர் 17.51% அதிகம் | தி/ள்.எம்.சரவணா கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் 4.95% அதிகம் |

சிப்பம் 12 (ந.க.எண்:6730/2013/எ□டி.3)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள் | தே□□ செய்யப்பட்ட ஒ□ப□ததார□ |
|---|---|---|---|---|
| 12 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86 க்கு உட்பட்ட அருள் கார்டன், பிலால் நகர், பிலால் எஸ்டேட், பொன்விழா நகர், சௌகார் நகர், அல்அமீன் காலனி பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | **287.90** | **1.**திருமதி. எம்.சரோஜினி, கோயம்புத்தூர் 4.93% அதிகம்<br>**2.**திரு.கே.நடராஜன், கோயம்புத்தூர் 6.73% அதிகம் | திருமதி. எம்.சரோஜினி, கோயம்புத்தூர் 4.93% அதிகம் |

சிப்பம் 13 (ந.க.எண்:6731/2013/எ□டி.3)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□ |
|---|---|---|---|---|
| 13 | வடக்கு மண்டலம் வார்டு எண் 39 க்கு உட்பட்ட பாரதி காலனி குறுக்கு சாலை,துரைசாமி நகர் பிரதான சாலை, வென்கிலான் குட்டை மற்றும் பி.ஆர்.பி கார்டன் குறுக்கு சாலை மற்றும் வார்டு எண் 40க்குட்பட்ட விஜி ராவ் நகர், சுபாஷ் நகர், இளங்கோ நகர்,தென்றல் நகர் மற்றும் பி.பி.சி.காலனி பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 244.60 | **1.**தி/ள்.வெற்றி கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் 4.98% அதிகம்<br><br>**2.**தி/ள்.மல்லையன் பில்டர்ஸ் கோயம்புத்தூர் 8.09% அதிகம் | தி/ள்.வெற்றி கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் 4.98% அதிகம் |

சிப்பம் 14 (**ந.க.எண்:6732/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **14** | வடக்கு மண்டலம் வார்டு எண்**40**க்கு உட்பட்ட வரராஜு◌ுலு நகர், மற்றும் வார்டு எண்**41**க்குட்பட்ட பாரதிநகர், ராஜா நகர், ஓம் சக்தி நகர் விரிவாக்கம், திருவள்ளுவர் வீதி, கே.கே.நகர்,ராஜு◌ுவ் காந்தி நகர் நேரு நகர்,கஸ்தூரிபாய் நகர் மற்றும் பெரியார் நகர் பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | **281.00** | **1.**திரு.என்.தங்கவேலு கோயம்புத்தூர் 19.64% அதிகம்<br><br>**2.**திரு.எ.வெங்கடாசல ம் கோயம்புத்தூர் 4.95% அதிகம் | திரு.எ.வெங்கடாசலம் கோயம்புத்தூர் 4.95% அதிகம் |

சிப்பம் 15 (**ந.க.எண்:6733/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **15** | வடக்கு மண்டலம் வார்டு எண்**41**க்கு உட்பட்ட ஆர்.கே.புரம், மருதமலைக்கவுண்டர் லேஅவுட், விவேகானந்தா நகர் பகுதி, புத்தர் வீதி, சிமெண்ட் கான்கிரிட் தளம் அமைத்தல், காவலர் குடியிருப்பு பகுதி –II மற்றும் வ.ஊ.சி நகர் விடுபட்ட பகுதி,வார்டு எண்**44**க்குட்பட்ட தயிர் இட்டேரி சாலை நல்லாம்பாளையம் சாலை முதல் சங்கனூர் சாலை வரை தார் தளம் புதுப்பித்தல் | 253.00 | **1.**தி/ள்.எஸ்.ஆர்.ஏ& கம்பெனி, கோயம்புத்தூர் 9.28% அதிகம்<br><br>**2.**திரு.என்.தங்கவேலு கோயம்புத்தூர் 4.96% அதிகம் | திரு.என்.தங்கவேலு கோயம்புத்தூர் 4.96% அதிகம் |

சிப்பம் 16 (**ந.க.எண்:6734/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **16** | வடக்கு மண்டலம் வார்டு எண்**44**க்கு உட்பட்ட அன்னயப்பன் வீதி சோப் கம்பெனி முதல் சங்கனூர், நல்லாம்பானளயம் சாலை பகுதி, அன்னயப்பன் வீதி விரிவாக்கம், கணபதிபானளயம் வீதி இடும்பன் வீதி, கணேஷ் நகர், சரஸ்வதி நகர், பாரதி நகர் காந்திஜி சாலை நேதாஜி வீதி, ஓம் நகர் III குமாரசாமி கவுண்டர் வீதி, கண்ணுசாமி லே அவுட் மற்றும் வேணுகோபால் லே அவுட் பகுதி, வார்டு எண்**47**க்குட்பட்ட பாலன் நகர் பகுதி, கணபதிபுதூர் வீதி எண் **3,4,8,9** மற்றும் **10** குறுக்கு சாலை பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | **255.00** | **1.**தி/ள்.மல்லையன் பில்டர்ஸ் கோயம்புத்தூர் 4.94% அதிகம்<br><br>**2.**தி/ள்.எம்.சரவணா கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் 7.61% அதிகம் | தி/ள்.மல்லையன் பில்டர்ஸ் கோயம்புத்தூர் 4.94% அதிகம் |

சிப்பம் 17 (**ந.க.எண்:6735/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **17** | வடக்கு மண்டலம் வார்டு எண்**47**க்கு உட்பட்ட கணபதிபுதூர் வீதி எண்.**1,2,3,4** மற்றும் குறுக்கு சாலை பகுதி,வார்டு எண்**55**க்குட்பட்ட சாலை (Airtel road) அவிநாசி சாலையிலிருந்து சிற்றம்பலம் லே அவுட் மற்றும் பாப்பம்மாள் லே அவுட், கந்தசாமி லே அவுட், வேணுகோபால் லே அவுட் சாலை பகுதிகள், பொன்னி நகர் பிரதான சாலை மற்றும் நவ இந்தியா திட்ட சாலை மயானம் சாலை முதல் ஸ்ரீராம் அவென்யூ சந்திப்பு வரை உள்ள பகுதி, பரமேஸ்வரன்பிள்ளை லே அவுட் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதிகள், ஜி.கே.டி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | **275.65** | **1.**தி/ள்.ஸ்ரீமுத்துலட்சுமி &கோ பொள்ளாச்சி 4.95% அதிகம்<br><br>**2.**திரு.எ.அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 11.07% அதிகம் | தி/ள்.ஸ்ரீமுத்துலட்சுமி &கோ பொள்ளாச்சி 4.95% அதிகம் |

சிப்பம் 18 (**ந.க.எண்:6736/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **18** | மத்திய மண்டலம் வார்டு எண்**45**க்கு உட்பட்ட லெனின் நகர் ஆர்.ஜி நகர், தங்கம் நகர் காமி கவுண்டர் வீதி, காமாட்சி நகர், கந்தசாமி கவுண்டர் வீதி, தில்லை நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், எஸ்.பி.கன்னுசாமி வீதி பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை,<br>வார்டு எண்**49**க்குட்பட்ட அண்ணா நகர், நந்தி நகர், வேலம்மாள் நகர் மற்றும் ராமதாஸ் வீதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | 278.70 | **1.**திரு.எ.வெங்கடாசலம் கோயம்புத்தூர் 4.92% அதிகம்<br><br>**2.**திரு.என்.தங்கவேலு கோயம்புத்தூர் 20.81% அதிகம் | திரு.எ.வெங்கடாசலம் கோயம்புத்தூர் 4.92% அதிகம் |

சிப்பம் 19 (**ந.க.எண்:6737/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலை**யின் பெயர்** | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | **பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒ□ப□ததார□** |
|---|---|---|---|---|
| **19** | மத்திய மண்டலம் வார்டு எண்**49**க்கு உட்பட்ட நெடுஞ்செழியன் வீதி, சின்னதம்பி வீதி மற்றும் ஐசக் வீதி, சம்பத் வீதி, பக்தவச்சலம் வீதி,பட்டேல் வீதி மற்றும் சாஸ்திரி வீதி ஆகிய அனைத்து பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல் | **165.9** | **1.**திரு.ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 4.95% அதிகம்<br>**2.**தி/ள்.அபி அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 7.60% அதிகம் | திரு.ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 4.95% அதிகம் |

சிப்பம் 20 (**ந.க.எண்:6738/2013/எ□டி.3**)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | பெறபட்ட ஒ□ப□த□ புள்ளிகள் | தே□□ செய்யப்பட்ட ஒ□ப□ததார□ |
|---|---|---|---|---|
| **20** | மத்திய மண்டலம் வார்டு எண்53க்கு உட்பட்ட சின்னசாமி வீதி, எ2-எ2 திட்ட சாலை, நேதாஜி சாலை, இந்திரா நகர், 80அடி சாலைகளில் தார் தளம் புதுப்பித்தல் வார்டு எண் 68 & 74 க்குட்பட்ட பாரதி நகர் பிரதான சாலையிருந்து இராமநாதபுரம் பிரதான சாலை வரையிலும் பாப்பம்மாள் வே அவுட் சாலையில் தார் தளம் புதுப்பித்தல் | 247.30 | **1.**தி/ள்.மல்லையன் பில்டர்ஸ் கோயம்புத்தூர் 4.64% அதிகம்<br><br>**2.**தி/ள்.வெற்றி கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் 4.27% அதிகம் | தி/ள்.மல்லையன் பில்டர்ஸ் கோயம்புத்தூர் 4.64% அதிகம் |

சிப்பம் 20க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்நதாரர்களில் தி/ள் வெற்றி கன்ஸ்டிரக்சன், கோயம்புத்தூர் அவர்கள் தொழில் நுட்ப தகுதியில் நிறைவு பெறாத காரணத்தால் ஒப்பந்ததாரர் தி/ள்.மல்லையன் பில்டர்ஸ், கோயம்புத்தூர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.

இப்பணிகளுக்கான தொகை குறித்த காலத்தில் முடிக்கப்பட வேண்டிய அரசு கடன் உதவியாக உள்ளதாலும், பாதாள சாக்கடை பணிகள் முடிந்துள்ளதால் பழுதடைந்த இச்சாலைகளை உடனடியாக துவங்கி முடிக்க வேண்டி உள்ளதாலும் மேற்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலைக்கு அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், அதற்காகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு இப்பணிகளுக்கு உண்டான பட்டியல் தொகையில் வழுங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.10897/2013/எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 268 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு 24.10.2013 இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 73 அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூரின்றி சாலையை கடக்கும் வகையில் அரசு மருத்துவமனை அருகே தேசிய நெடுஞ்சாலை துறையினருக்கு சொந்தமான சாலையில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல். | **72.60** | **24-10-2013 இரண்டாவது அழைப்பு** | 1. தி/ள் யுனிவர்சிஸ். கோயம்புத்தூர் **4.90% அதிகம்**<br><br>2.தி/ள் கோவை டிஜி டெக். கோயம்புத்தூர்<br><br>**தொழில் நுட்ப தகுதி இல்லை** | தி/ள் யுனிவர்சிஸ். கோயம்புத்தூர் **4.90% அதிகம** |

**அலுவலகக்குறிப்பு** :- மேற்படி பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 11041/13/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 269 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு 24.10.2013 இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 64 சிங்காநல்லூர் பேருந்து நிலையம் அருகில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூரின்றி சாலையை கடக்கும் வகையில் சாலையில் நடைபாதை மேம்பாலம் அமைத்தல். | **41.85** | **24-10-2013 முதல் அழைப்பு** | 1. திரு யுனிவர்சிஸ். கோயம்புத்தூர் **4.89% அதிகம்**<br>2.திரு கோவை டிஜி டெக். கோயம்புத்தூர் **தொழில் நுட்ப தகுதி இல்லை** | திரு யுனிவர்சிஸ். கோயம்புத்தூர் **4.89% அதிகம்** |

**அலுவலகக்குறிப்பு** :- மேற்படி பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 11042/13/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 270 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது கணக்குப்பிரிவு – இணையதளம் வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்துதல் – வங்கிகளுக்கு அனுமதி வழங்குதல்–மாமன்ற ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை:-
1. சிட்டியூனியன் வங்கி, முன்மொழிவு நாள்.27.09.13.
2. ஐசிஐசிஐ பேங்க், முன்மொழிவு நாள்.15.10.13.
3. எச்டிஎப்சிபேங்க், முன்மொழிவு நாள்.26.09.13.
4. ஆக்ஸிஸ் பேங்க், முன்மொழிவு நாள்.01.10.13.
5. யூனியன் பேங்க் ஆப் இந்தியா, முன்மொழிவு நாள்.10.10.13.

———————

கோயம்புத்தூர் மாநகராட்சி தற்போது ஐசிஐசிஐ வங்கியின் உதவியுடன் IPG (Internet Payment Gateway) இணையதளத்தில் கட்டணம் செலுத்தும் நுழைவாயில் வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதற்கு வரிதாரர்கள் செலுத்தும் தொகையில் 1.85% + சேவைவரி உபயோகிப்பாளர் கட்டணமாக வங்கிக்கு செலுத்தி வருகின்றனர். இதனால் வரிதாரர்களுக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணத்துடன் கூடுதல் தொகை செலுத்த வேண்டியுள்ளது.

தற்போது 1) சிட்டியூனியன் வங்கி, 2) ஐசிஐசிஐ வங்கி, 3) எச்டிஎப்சி வங்கி,4) ஆக்ஸிஸ் வங்கி மற்றும் 5) யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகிய 5 வங்கிகளும் தங்களிடம் உள்ள கீழ்க்கண்ட வசதிகள் வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர்கட்டணம் வசூலிக்க தயாராக இருப்பதாக தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளனர்.

**1) சிட்டியூனியன் வங்கி:**

அ) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் அதாவது சொத்துவரி / குடிநீர் கட்டணம் செலுத்துப்படுவதற்கு ஒவ்வொரு முறைக்கும் ரூ.5/– Net Banking சேவைக் கட்டணமாகவும்,

ஆ) கிரெடிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 1% + சேவை வரி எனவும்,

இ) டெபிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 0.75% + சேவை வரி (ரூ.2000/–க்கும் குறைவான பரிமாற்றத்துக்கு) எனவும், 1.00% + சேவை வரி (ரூ.2000/– க்கும் கூடுதலான பரிமாற்றத்துக்கு) எனவும் தெரிவித்துள்ளனர்.

**2) ஐசிஐசிஐ வங்கி:**

அ) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் அதாவது சொத்துவரி / குடிநீர் கட்டணம் செலுத்துப்படுவதற்கு ஒவ்வொரு முறைக்கும் ரூ.5/– + சேவை வரி Net Banking சேவைக் கட்டணமாகவும்,

ஆ) கிரெடிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 1% + சேவை வரி எனவும்,

இ) டெபிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 0.75% + சேவை வரி (ரூ.2000/–க்கும் குறைவான பரிமாற்றத்துக்கு) எனவும், 1.00% + சேவை வரி (ரூ.2000/– க்கும் கூடுதலான பரிமாற்றத்துக்கு) எனவும் தெரிவித்துள்ளனர்.

**3) எச்டிஎப்சி வங்கி:**

அ) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் அதாவது சொத்துவரி / குடிநீர் கட்டணம் செலுத்துப்படுவதற்கு ஒவ்வொரு முறைக்கும் ரூ.5/– Net Banking சேவைக் கட்டணமாகவும்,

ஆ) கிரெடிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 1% + சேவைவரி எனவும்,

இ) டெபிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 0.75% + சேவை வரி (ரூ.2000/– க்கும் குறைவான பரிமாற்றத்துக்கு) எனவும், 1.00% + சேவை வரி (ரூ.2000/– க்கும் கூடுதலான பரிமாற்றத்துக்கு) எனவும் தெரிவித்துள்ளனர்.

**4) ஆக்ஸிஸ் வங்கி:**

அ) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் அதாவது சொத்துவரி / குடிநீர் கட்டணம் செலுத்துப்படுவதற்கு ஒவ்வொரு முறைக்கும் ரூ.12/– Net Banking சேவைக் கட்டணமாகவும்,

ஆ) கிரெடிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 1.50% + சேவை வரி எனவும்,

இ) டெபிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 0.75% + சேவை வரி (ரூ.2000/–க்கும் குறைவான பரிமாற்றத்துக்கு) எனவும், 1.00% + சேவை வரி (ரூ.2000/– க்கும் கூடுதலான பரிமாற்றத்துக்கு) எனவும் தெரிவித்துள்ளனர்.

**5) யூனியன் பேங்க் ஆப் இந்தியா:**

அ) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் அதாவது சொத்துவரி / குடிநீர் கட்டணம் செலுத்துப்படுவதற்கு ஒவ்வொரு முறைக்கும் ரூ.5/– + சேவை வரி Net Banking சேவைக் கட்டணமாகவும்,

ஆ) கிரெடிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 1.10% + சேவை வரி எனவும்,

இ) டெபிட் கார்டு வழியாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை செலுத்த 0.75% + சேவை வரி (ரூ.2000/–க்கும் குறைவான பரிமாற்றத்துக்கு) எனவும், 1.00% + சேவை வரி (ரூ.2000/– க்கும் கூடுதலான பரிமாற்றத்துக்கு) எனவும் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் தாங்கள் விரும்பும் வங்கிகளிலிருந்து மாநகராட்சிக்கு சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்த ஏதுவாக மேற்கண்ட 5 வங்கிகளுக்கும் நெட் பேங்க்கிங் (Net Banking) வழியாகவும், IPG (Internet Payment Gateway) வழியாகவும் மற்றும் செல்போன் வழியாகவும் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் தொகை வசூலிக்க அனுமதி வழங்கலாம்.

மேற்படி வங்கிகளுடன் கூடுதலாக தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இச்சேவை இருப்பின் அந்த வங்கிகளுக்கும் இப்பணியினை ஒப்படை செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம். ந.க.எண்.10336/12/பி13

**மாநகர மன்ற தீர்மானம் எண் 271 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்துார் மாநகராட்சி – நகரமைப்பு – சிறைத்துறைக்கு சொந்தமான இடத்தில் செம்மொழி பூங்கா அமைக்க பெறப்பட்ட அரசாணையில் நில மாற்று உபயோகம் - **5.63** ஏக்கர் இடத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் அமைக்க அனுமதி வழங்க கோரியது – குத்தகை தொகை நிர்ணயம் செய்தல் – மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக. |
| **பார்வை:** | **1.** மாமன்ற தீர்மானம் எண்.**329**, நாள்.**31.01.2013.**<br>**2.**அரசுச் செயலாளர், ந.நி(ம)கு.வ.துறை கடித எண்.**1184**/மாந**2/2012-10**, நாள்.**21.10.2013.** |

உலகத் தரம் வாய்ந்த உள் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைக்க விளையாட்டு துறைக்கு **3.80** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதன் பேரில், **5.63** ஏக்கர் நிலத்தில் உள் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் ஆகியவற்றை அமைக்க விளையாட்டு துறைக்கு அனுமதி வழங்கவும், கட்டுமானத்திற்கு பின்பு பராமரிப்பு பணிகளை மாநகராட்சி மேற்கொள்ளவும், மேலும் இதன் மூலம் வரும் வருவாயை மாநகராட்சி மற்றும் விளையாட்டு துறை சரிபாதியாக பகிர்ந்து கொள்ளவும் பார்வை **1**ல் காண் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்பப்பட்டது.

பார்வை **2**ல் காண் அரசு கடிதத்தில், விளையாட்டரங்கம் விளையாட்டு துறையால் லாப நோக்கில் நடத்தப்படுவது இல்லை என்றும் பொது மக்கள் சேவைக்காக நடத்தப்படுகிறது எனவும், விளையாட்டரங்கத்தை பராமரிக்க தொழில் நுட்பம் தெரிந்த பயிற்சியாளர்கள் விளையாட்டு துறையில் உள்ளதால் அவர்களால் பராமரித்து மக்களுக்கு சேவை அளிக்க முடியும் என்றும், விளையாட்டரங்கம் விளையாட்டு வீரர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் குறைந்த கட்டணம் செலுத்தி அரங்கத்தை பயன்படுத்தி வருவதால் அதில் வரப்பெறும் வருமானம் விளையாட்டு அரங்கத்தை பராமரிக்க மட்டுமே போதுமானதாக இருக்கும் எனவும், மாநகராட்சி இடம் வழங்குவதால் அரசு நிர்ணயம் செய்யும் குத்தகை தொகையை விளையாட்டு துறையிடமிருந்து பெறலாம் எனவும் அரசு மாநகராட்சியின் பல திட்டங்களுக்கு இடத்தினை இலவசமாக வழங்கி உள்ளதையும் கருத்தில் கொண்டு, மாநகராட்சி **5.63** ஏக்கர் இடத்தினை குத்தகை தொகையினை மட்டும் மாநகராட்சி பெற்றுக் கொண்டு விளையாட்டு துறைக்கு வழங்குவது தொடர்பாக பரிசீலனை செய்து குறிப்புரை அனுப்ப கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, பார்வை **1**ல் காண் மாமன்ற தீர்மானத்தை ரத்து செய்வது தொடர்பாகவும், **5.63** ஏக்கர் இடத்தினை அரசு விதிகளின்படி நிர்ணயம் செய்யும் குத்தகை தொகையினை மட்டும் மாநகராட்சி பெற்றுக் கொண்டு விளையாட்டு துறைக்கு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்குவது தொடர்பாகவும் மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண்.**8336 /2011**/எம்.எச்.**5.**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 272 நாள் 14.11.2013**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

**பொருள்:** கோயம்புத்துார் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – இரயில்வே திட்டப்பணிகள் – இரயில்வே கடவுகள் உள்ள மாநகராட்சி சாலைகளில் மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ள நெடுஞ்சாலை துறைக்கு மாநகராட்சி சாலைகளை நிரந்தரமாக ஒப்படைப்பு செய்வது – தொடர்பாக.

**பார்வை:** **1.** அரசு துணைச் செயலாளர், ந.நி.(ம).கு.வ.துறை அவர்களின் நே.மு.க.எண்.**10454**/எம்.சி.**II/2013-1**, நாள்.**08.05.2013.**
**2.** மாமன்ற தீர்மானம் எண்.**49**, நாள்.**21.05.2013.**
**3.** கோட்டப் பொறியாளர் (தே.நெ), அவர்களின் கடிதம் எண். ROB-RUB/2012-13/வஅ, நாள்.**08.11.2013.**

*******

பார்வை **1**ல் காண் அரசு நேர்முக கடிதத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகளை விரைந்து முடிக்க மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க தெரிவித்தும் தவறும் பட்சத்தில் மேம்பாலம் கட்டும் பணிக்கான **50%** திட்ட செலவினை மாநகராட்சி ஏற்க நேரும் எனத் தெரிவித்தும் இதனால் மாநகராட்சிக்கு தேவையில்லாத கூடுதல் நிதி சுமை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில், மேற்படி மாநகராட்சி சாலைகளை ரயில்வே மேம்பாலம் கட்டும் பணி விரைவில் துவங்குவதற்கு மாநகராட்சி சாலைகளில் பணி மேற்கொள்ள நிரந்தரமாக ஒப்படைப்பு செய்ய அரசுக்கு பரிந்துரை செய்ய பார்வை **2**ல் காண்மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தற்போது பார்வை 3ல் காண் கடிதத்தில், கடவு எண்.4ல் அமைந்துள்ள ஒண்டிப்புதூர் - SIHS காலனி சாலையில் இரயில்வே கடவுக்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்ட சாலையை நிரந்தரமாக ஒப்படைக்க நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் விடுபட்டுள்ளதாகவும், எனவே இச்சாலையையும் நிரந்தரமாக ஒப்படைக்க அரசுக்கு பரிந்துரை செய்ய கோரப்பட்டுள்ளது. ஏற்கனவே தற்காலிகமாக ஒப்படைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாலும், பார்வை2ல் காண் மாமன்ற தீர்மானத்தில் விடுபட்டுள்ளதாலும், பார்வை 3ல் காண் கடிதத்தில் நெடுஞ்சாலைத்துறை கோரியபடி கடவு எண்.4ல் அமைந்துள்ள ஒண்டிப்புதூர் - SIHS காலனி சாலையில் இரயில்வே கடவுக்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்ட மாநகராட்சி சாலையை நிரந்தரமாக ஒப்படைக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.41101 /2007/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 273 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி - நகரமைப்பு பிரிவு - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இருந்து நேரு விளையாட்டு அரங்கத்தினை சுற்றியுள்ள கடைகளை மட்டும் மீண்டும் மாநகராட்சி வசம் ஒப்படைக்க கோரியது தொடர்பாக அரசுச் செயலாளர், ந.நி.(ம).கு.வ.துறை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் – நேரு விளையாட்டு அரங்கத்திற்கான குத்தகை காலம் மற்றும் தொகை உயர்த்துதல் உள்ளிட்டவைகளை முடிவு செய்தல் – மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

**பார்வை:** அரசு கடிதம் எண்.1821/மாந2/2013-4, நாள்.09.05.2013.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள நேரு விளையாட்டு அரங்கத்தை மட்டும் விளையாட்டு துறையே பராமரிக்கவும் மேற்கொண்டு எவ்வித கட்டுமானமும் கட்டக் கூடாது என்ற நிபந்தனையுடனும் நில உரிமை மாநகராட்சி பெயரில் இருக்கும் என்ற நிபந்தனையுடன், அதனை சுற்றியுள்ள கடைகளை மட்டும் மீண்டும் மாநகராட்சி வசம் எடுத்து சட்ட விதிகளின்படி வாடகைக்கு விடவும் அதன் மூலம் கிடைக்கப் பெறும் ஆண்டு வருமானத்தில் 30% தொகையினை நேரு விளையாட்டு அரங்கத்தினை பராமரிக்க மாவட்ட விளையாட்டு துறைக்கு வழங்கவும் பரிந்துரை செய்து அரசின் ஆணை பெற மாமன்ற தீர்மானம் எண்.417, நாள்.18.03.2013 நிறைவேற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு உரிய ஆணை பிறப்பிக்க பிரேரணை அனுப்பப்பட்டது. இப்பொருள் தொடர்பாக அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அலுவலகத்தில் 03.05.2013 ம் தேதிய கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் மற்றும் ஆவணங்களின்படி கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

1) குத்தகைத் தொகை மற்றும் காலம் ஆய்வு செய்து உயர்த்துவது.
2) முன்பிருந்த விளையாட்டரங்கம் அதனை சுற்றியுள்ள கடைகள் தமிழ்நாடு விளையாட்டு மற்றும் மேம்பாட்டு துறையே வாடகைக்கு விடவும் மற்றும் பராமரிக்கவும்
3) மீதமுள்ள 1.24 ஏக்கர் இடத்தில் மாநகராட்சி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை ஆய்வு செய்து மேற்படி இடம் யாருக்கு தேவை என்பதை முடிவு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நேரு விளையாட்டு அரங்கம் மற்றும் சுற்றியுள்ள கடைகளை விளையாட்டு துறையே வாடகைக்கு விடுவது மற்றும் பராமரிப்பது தொடர்பாக, மேற்படி வ.எண்.(1) மற்றும் (2) மாமன்றத்தின் முடிவிற்கும், வ.எண்.(3) ல் குறிப்பிட்ட இடம் மாநகராட்சி வசம் பூங்காவாக உள்ளதால், இவ்விவரத்தை அரசுக்கு தெரிவிக்கவும், மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண்.13635/2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 274 நாள் 14.11.2013**

1). அ) அரசு விதிகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்யும் குத்தகைத் தொகையினை பெற்றுக்கொண்டு 1.4.2013 முதல் 30 வருடத்திற்கு குத்தகைக்கு விட முடிவு செய்யப்பட்டது.

ஆ) 30 வருட குத்தகைக் காலம் முடிவு பெற்றபின்னர், மேற்படி நிலத்தில் அமையப்பெற்றுள்ள அனைத்து கட்டுமானங்களும் உள்ளது உள்ள நிலையில் மாநகராட்சி வசம் எவ்வித ஈட்டுத் தொகையும் இன்றி ஒப்படைக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

2). அனுமதிக்கப்பட்டது

3). 1.24 ஏக்கர் இடம் மாநகராட்சி பூங்காவாக உள்ளதால் இவ்விடம் மாநகராட்சிக்கு தேவை என்ற விவரத்தை அரசுக்கு தெரிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

**பொருள் :** பணியமைப்பு –கோயம்புத்தூர் மாநகராட்சி – 23.04.2013–ல் நியமனம் செய்யப்பட்ட இரண்டு உதவிப் பொறியாளர் பணி நியமன ஆணை ரத்து செய்தல்– சம்பந்தமாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சியில், மாமன்றத் தீர்மானம் எண்.222, நாள். 24.09.2012 மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2375./2007/எம்சி1, நாள். 23.04.2013–ன்பயும் திரு. டி. சிவபரஞ்ஜோதி, திரு. பி. ராஜேஷ்குமார் மற்றும் திரு. பி.கணேசன் ஆகியோருக்கு உதவிப்பொறியாளருக்கான பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணி நியமன ஆணை வழங்கப்பட்டதில், திரு. பி. கணேசன் மட்டும் 25.04.2013–ல் பணியில் சேர்ந்து கொண்டார். திரு. டி. சிவபரஞ்ஜோதி மற்றும் திரு. பி. ராஜேஸ்குமார் ஆகியோர் இதுவரை பணியில் சேரவில்லை. எனவே மேற்படி இருவருக்கும் 14.06.2013 மற்றும் 22.08.2013 ஆகிய தேதிகளில் 7 தினங்களுக்குள் பணியில் சேர வேண்டும் எனவும், 30.09.2013–ல் 15 தினங்களுக்குள் பணியில் சேர வேண்டும் எனவும், தவறும்பட்சத்தில் நியமன ஆணை ரத்து செய்யப்படும் என இறுதியாக அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் இதுவரை இருவரும் பணியில் சேராமலும், எவ்வித பதிலும் அனுப்பாமலும் உள்ளனர். மேற்படியாருக்கு பணி நியமன ஆணை 23.04.2013–ல் வழங்கப்பட்டு 23.10.2013 அன்று ஆறு மாதங்கள் முடிவு பெற்ற நிலையில், மேற்படி திரு. டி. சிவபரஞ்ஜோதி மற்றும் திரு. பி. ராஜேஷ்குமார் ஆகியோரது பணி நியமன ஆணையினை ரத்து செய்வது தொடர்பாக மன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 2375 /2007/எம்சி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 275 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – செல்வி. ருக்குமணி, இளநிலை உதவியாளர், பல்லடம் நகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் கோருவது – தொடர்பாக.

-------

பல்லடம் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் செல்வி.பி. ருக்குமணி அவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் வழங்குமாறு கேட்டுள்ளார்.

பல்லடம் நகராட்சி மாமன்ற தீர்மான எண்.171 நாள்.07.06.2013ல் மேற்படியாரை ஒரு வழி மாறுதலில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு இளநிலை உதவியாளராக பணியிட மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டு பல்லடம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் கடித ந.க.எண்.741/2013/எ1, நாள்.26.06.2013ன் மூலமாக மன்ற தீர்மான நகல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் தற்போது 21 இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பணியிடங்கள் காலியாக உள்ளது. இதில் செல்வி.பி. ருக்குமணி, இளநிலை உதவியாளர், பல்லடம் நகராட்சி அவர்களை ஒரு வழி மாறுதல் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சியில் சேர்த்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பரிந்துரைத்து செயற்குறிப்பு அனுப்ப மாமன்ற அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 7783/2013/(சி1 ம) எம்.சி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 276 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 11

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தவறான பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் திருமதி. யா. உஷாராணிக்கு, நிர்வாக அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டது – நிர்வாக அலுவலர் பதவி உயர்வினை ரத்து செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் தொடர்பாக.

--------

இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 284, நாள்.29.11.2012ன்படி இம்மாநகராட்சியில் பணிபுரியும் கண்காணிப்பாளர்கள் திருமதி. யா. உஷாராணி, மற்றும் திருமதி. ஆர். மோகனசுந்தரி, ஆகியோருக்கு கண்காணிப்பாளர் பதவியிலிருந்து நிர்வாக அலுவலர்/ கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருமதி. வி. லீனா, கண்காணிப்பாளர், பொதுகணக்குப்பிரிவு, அவர்கள் 30.11.2012ம் தேதியன்று அரசுக்கு அனுப்பிய மேல்முறையீடு மனுவில் திருமதி. யா. உஷாராணி, கண்காணிப்பாளரின் பெயர் கண்காணிப்பாளர்/உதவிவருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் வரிசை 1ல் உள்ளதாகவும் ஆனால் அரசாணை எண்.(ப)427, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள்.26.10.2006–ன்படி திருமதி.யா.உஷாராணி ஒருவழி மாறுதல் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உதவியாளர் பணியிடத்திற்கு பணிமூப்பு பட்டியலில் கடைசியாக வைக்கப்படுவார் என்ற நிபந்தனைக்கு முரணாக பணிமூப்பு பட்டியலில் முன்னதாக இடம் பெற செய்து 01.12.2006 அன்று பணியில் சேர அனுமதிக்கப்பட்டதாகவும் எனவே அதனை ரத்து செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

அன்னாரது மேல்முறையீடு விண்ணப்பம் அரசுக்கு ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண். 13924/2012/எம்.சி.2, நாள்.21.12.2012 அன்று அனுப்பி வைக்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண். 52020/2012/மாநஅ1, நாள்.31.01.2013ம் தேதிய கடிதத்தில் தனியரின் மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை தமிழ்நாடு மாநகராட்சி பணி விதிகளின்படி ஆய்வு செய்து குறிப்புரையுடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பேரில் சம்பந்தப்பட்ட கோப்புகளை ஆய்வு செய்து உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் /உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் திருத்தம் செய்யவும் திருமதி. யா. உஷாராணி, கண்காணிப்பாளருக்கு வழங்கப்பட்ட நிர்வாக அலுவலர் பதவி உயர்வினை ரத்து செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டி கீழ்கண்டவாறு குறிப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆணையாளர் அவர்களின் குறிப்பாணை ந.க.எண்.24383/2004/எம்.சி.1, நாள். 21.10.2004ல் வெளியிடப்பட்ட உதவியாளருக்கான பணிமூப்பு பட்டியலின்படி 62 நபர்கள் இடம் பெற்று இருந்தனர். திருமதி.உஷாராணி, உதவியாளரின் பணிப்பதிவேடு மற்றும் ஒருவழி மாறுதல் பெற்று கோயம்புத்தூர் மாநகராட்சிப் பணியில் சேர்ந்த கோப்பினை பரிசீலித்ததில், தனியர் சென்னை மாநகராட்சி, மின்துறையில் 20.10.1999 அன்று தான் தட்டச்சராக பணியில் சேர்ந்து 04.03.2005–ல் உதவியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். மேலும், அரசாணை எண். (ப) 427, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள்.26.10.2006–ன்படி திருமதி.யா.உஷாராணி ஒருவழி மாறுதல் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உதவியாளர் பணியிடத்திற்கு பணிமூப்பு பட்டியலில் கடைசியாக வைக்கப்படுவார் என்ற நிபந்தனையுடன் 01.12.2006 அன்று பணியில் சேர அனுமதிக்கப்பட்டார். அதன்பின் 2004–ம் ஆண்டு வரை ஒன்றாக வெளியிடப்பட்ட உதவியாளர் பணிமூப்புப் பட்டியல் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, 22.12.2006–ல் வெளியிடப்பட்ட உதவியாளர் பணிமூப்புப் பட்டியலில் உதவியாளர்கள் 26 நபர்கள் எனவும் உயர்த்தப்பட்ட உதவியாளர் 16 நபர்கள் ஆக மொத்தம் 42 உதவியாளர்களுக்கு பணிமூப்புப் பட்டியல் வெளியிடப்பட்டது. 16.10.1996 அன்று உயர்த்தப்பட்ட உதவியாளராக பதவி உயர்வு பெற்றவர்களில் 27 பேர் உதவியாளர் எனவும், 16 பேர் உயர்த்தப்பட்ட உதவியாளர் எனவும் பணிமூப்புப் பட்டியல் பிரிக்கப்பட்டு, இறுதி பணிமூப்புப் பட்டியலில் வரிசை எண்.43–க்குப் பதிலாக வரிசை எண்.27–ல் திருமதி. யா. உஷாராணி, உதவியாளர் பெயர், அவர் பெற்று வந்த அரசாணைக்குப் புறம்பாக வெளியிடப்பட்டுள்ளது.

உதவியாளர் மற்றும் உயர்த்தப்பட்ட உதவியாளர் ஆகிய இரு பணியிடங்களும் ஒன்றுதான். எனவே, சென்னை மாநகராட்சியிலிருந்து ஒருவழி மாறுதலில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியில் சேர்ந்த திருமதி. யா.உஷாராணி, உதவியாளரை பணிமூப்பு பட்டியலில் அரசாணைக்கிணங்க இவ்வலுவலக குறிப்பாணை ந.க.எண்.42237/2006/எம்.சி.2, நாள். 22.12.2006ல் காணும் பணிமூப்புப் பட்டியலில் மொத்தம் உள்ள 42 உதவியாளர்களில் 42 வது உதவியாளராக 16.10.1996ல் பணியில் சேர்ந்த திரு. ஆர். வேலுமணி என்பவருக்கு பின்னால் இம்மாநகராட்சியில் 01.12.2006ல் பணியில் சேர்ந்த திருமதி. யா.உஷாராணியின் பெயர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். எனவே இவ்வலுவலக குறிப்பாணை ந.க.எண்.14849/2008/எம்.சி.2, நாள்.06.12.2008ல் தவறாக வெளியிடப்பட்ட உதவியாளர் இறுதி பணிமூப்புப் பட்டியல் திருத்தியமைக்கப்பட வேண்டும். 27வது பெயராக திருமதி. யா. உஷாராணி, அரசாணைக்கு புறம்பாக சேர்க்கப்பட்டிருப்பதை ரத்து செய்ய வேண்டும்.

பணி மூப்பின் அடிப்படையில் **06.12.2008** ஆம் தேதி தவறாக வெளியிடப்பட்ட இவ்வலுவலக குறிப்பாணை ந.க.எண்.**14849/2008**/எம்.சி.**2**, நாள்.**06.12.2008**ல் உதவியாளர் பணிமூப்பு பட்டியல் கீழ்கண்டவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும்.

| வ எண் | 06.12.2008ல் ஏற்கனவே வெளியிடப்பட்ட உதவியாளர் பணிமூப்புப் பட்டியல் | | திருத்தம் செய்யப்பட வேண்டியது | |
|---|---|---|---|---|
| 1. | பி.ராஜம்மாள் | 05.06.1996 | பி.ராஜம்மாள் | 05.06.1996 |
| 2. | கே. நாகப்பன் | 05.06.1996 | கே. நாகப்பன் | 05.06.1996 |
| 3. | எம். சிவகுமார் | 05.06.1996 | எம். சிவகுமார் | 05.06.1996 |
| 4. | ஏ.சரோஜினி | 05.06.1996 | ஏ.சரோஜினி | 05.06.1996 |
| 5. | ஜெ. பாலாமணி | 05.06.1996 | ஜெ. பாலாமணி | 05.06.1996 |
| 6. | ஜெ. கௌசல்யா | 16.10.1996 | ஜெ. கௌசல்யா | 16.10.1996 |
| 7. | எஸ். சந்திரகாந்தி | 16.10.1996 | எஸ். சந்திரகாந்தி | 16.10.1996 |
| 8. | என். மனோகரன் | 16.10.1996 | என். மனோகரன் | 16.10.1996 |
| 9. | டி.ஆர்.ரவி | 16.10.1996 | டி.ஆர்.ரவி | 16.10.1996 |
| 10. | செந்தில்குமார் ரத்தினம் | 16.10.1996 | செந்தில்குமார் ரத்தினம் | 16.10.1996 |
| 11. | தே. லட்சுமிபிரபா | 16.10.1996 | தே. லட்சுமிபிரபா | 16.10.1996 |
| 12. | வி.சரவணன் | 16.10.1996 | வி.சரவணன் | 16.10.1996 |
| 13. | கே.ரவிக்குமார் | 16.10.1996 | கே.ரவிக்குமார் | 16.10.1996 |
| 14. | **யா. உஷாராணி** | **01.12.2006** | மோகனசுந்தரி | 16.10.1996 |
| 15. | மோகனசுந்தரி | 16.10.1996 | என்.அண்ணாதுரை | 16.10.1996 |
| 16. | என்.அண்ணாதுரை | 16.10.1996 | எஸ். வி. லட்சுமணன் | 16.10.1996 |
| 17. | எஸ். வி. லட்சுமணன் | 16.10.1996 | எஸ். கணேஷ்குமார் | 16.10.1996 |
| 18. | எஸ். கணேஷ்குமார் | 16.10.1996 | எம். பாசு | 16.10.1996 |
| 19. | எம். பாசு | 16.10.1996 | டி. ராஜமாணிக்கம் | 16.10.1996 |
| 20. | டி. ராஜமாணிக்கம் | 16.10.1996 | கே. மாணிக்கம், | 16.10.1996 |
| 21. | கே. மாணிக்கம், | 16.10.1996 | எஸ்.ஆர். புண்ணியவதி | 16.10.1996 |
| 22. | எஸ்.ஆர். புண்ணியவதி | 16.10.1996 | ப. அன்பரசி | 16.10.1996 |
| 23. | ப. அன்பரசி | 16.10.1996 | ரத்தினாம்பாள் | 16.10.1996 |
| 24. | ரத்தினாம்பாள் | 16.10.1996 | எஸ். இருதயராஜா | 16.10.1996 |
| 25. | எஸ். இருதயராஜா | 16.10.1996 | வி. லீனா | 16.10.1996 |
| 26. | வி. லீனா | 16.10.1996 | ஆர். தமிழ்வேந்தன் | 16.10.1996 |
| 27. | ஆர். தமிழ்வேந்தன் | 16.10.1996 | எம்.எம். கனகராஜ் | 16.10.1996 |
| 28. | எம்.எம். கனகராஜ் | 16.10.1996 | ஆர்.வேலுமணி | 16.10.1996 |
| 29. | ஆர்.வேலுமணி | 16.10.1996 | **யா. உஷாராணி** | **01.12.2006** |

தவறான பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் திருமதி. யா. உஷாராணி, உதவியாளருக்கு, **03.06.2009** ஆம் தேதியன்று வழங்கப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வை ரத்து செய்து கண்காணிப்பாளர் பதவி உயர்வு தேதிகள் கீழ்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டு **01.04.2012**ல் வெளியிடப்பட்ட கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பணிமூப்புப் பட்டியல் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

| வ எண். | 01.04.2012ல் ஏற்கனவே வெளியிடப்பட்ட கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பணிமூப்புப் பட்டியலின்படி பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள் | | கண்காணிப்பாளர் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டிய நாள் | |
|---|---|---|---|---|
| 1. | **யா. உஷாராணி, கண்காணிப்பாளர்.** | **03.06.2009** | மோகனசுந்தரி, கண்காணிப்பாளர். | 03.06.2009 |
| 2. | மோகனசுந்தரி, கண்காணிப்பாளர். | 24.07.2010 | எஸ். வி. லட்சுமணன், கண்காணிப்பாளர். | 24.07.2010 |
| 3. | எஸ். வி. லட்சுமணன், கண்காணிப்பாளர். | 24.07.2010 | எஸ். கணேஷ்குமார், உதவி வருவாய் அலுவலர். | 24.07.2010 |
| 4. | எஸ். கணேஷ்குமார், உதவி வருவாய் அலுவலர். | 24.07.2010 | டி. ராஜமாணிக்கம், உதவி வருவாய் அலுவலர். | 24.07.2010 |
| 5. | டி. ராஜமாணிக்கம், உதவி வருவாய் அலுவலர். | 24.07.2010 | கே. மாணிக்கம், கண்காணிப்பாளர். | 24.07.2010 |
| 6. | கே. மாணிக்கம், கண்காணிப்பாளர். | 24.07.2010 | ப. அன்பரசி, கண்காணிப்பாளர். | 24.07.2010 |
| 7. | ப. அன்பரசி, கண்காணிப்பாளர். | 24.07.2010 | வி. லீனா, கண்காணிப்பாளர். | 24.07.2010 |
| 8. | வி. லீனா, கண்காணிப்பாளர். | 01.03.2011 | ஆர். தமிழ்வேந்தன், கண்காணிப்பாளர். | 01.03.2011 |
| 9. | ஆர். தமிழ்வேந்தன், கண்காணிப்பாளர். | 01.03.2011 | என். அண்ணாதுரை, உதவி வருவாய் அலுவலர். | 01.03.2011 |
| 10. | என். அண்ணாதுரை, உதவி வருவாய் அலுவலர். | 27.06.2011 | எம்.எம். கனகராஜ், உதவி வருவாய் அலுவலர். | 27.06.2011 |
| 11. | எம்.எம். கனகராஜ், உதவி வருவாய் அலுவலர். | 27.06.2011 | **யா. உஷாராணி, கண்காணிப்பாளர்.** | **27.06.2011** |
| 12. | எம். நூர் முகமது, கண்காணிப்பாளர். | 19.08.2011 | எம். நூர் முகமது, கண்காணிப்பாளர். | 19.08.2011 |
| 13. | எஸ்.பி. செந்தில், கண்காணிப்பாளர். | 01.03.2012 | எஸ்.பி. செந்தில், கண்காணிப்பாளர். | 01.03.2012 |

மேற்கண்டவாறு **01.04.2012** ற்கான கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பணிமூப்புப் பட்டியலில் வரிசை எண்.**1**ல் உள்ள திருமதி. யா. உஷாராணியின் பெயரை வரிசைஎண்.**11**ல் திரு.எம்.எம்.கனகராஜ், உதவி வருவாய் அலுவலருக்கு அடுத்ததாக இடம் பெறச் செய்து அதன் அடிப்படையில் **01.04.2013**ற்கான கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் இறுதி பணிமூப்புப் பட்டியலை தயாரித்து வெளியிட வேண்டி உள்ளதால், மேற்படி தவறான பணிமூப்புப் பட்டியலின்படி கண்காணிப்பாளர் பணியில் இளையோரான திருமதி. யா. உஷாராணி, கண்காணிப்பாளருக்கு **01.02.2013**–ம் தேதி வழங்கப்பட்ட நிர்வாக அலுவலர் பதவி உயர்வை ரத்து செய்து உரிய இடத்தில் கண்காணிப்பாளராக பதவி இறக்கம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.13924/2012/எம்.சி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 277 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 57ல் உப்பிலிபாளையம் அருகில் மசக்காளிபாளையம் பிரதான சாலையில் ஓடையின் குறுக்கே உள்ள பாலத்தை புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 70,50,000- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் பழுதடைந்த பாலத்தின் சுவர்கள் வலுவிழந்து இடிந்துவிழும் அபாயம் உள்ளதால் பாலத்தை புதுப்பித்தல் பணிக்காக 2013-2014 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 11211/2013/டி2(கி)/எம்.டி 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 278 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண் 13**

**பார்வை:** மாமன்ற தீர்மான எண்: 6 நாள்: 25-04-2013

பார்வையில் கண்ட மாமன்ற தீர்மானத்தில் இம்மாநகராட்சியின் மூன்று காய்கறி அங்காடிகளில் அதாவது டி.கே.மார்கெட், அண்ணா மார்கெட் மற்றும் எம்.ஜி.ஆர்.மார்கெட் ஆகிய மூன்று காய்கறி சந்தைகளில் சேகரமாகும் காய்கறி கழிவுகளைக்கொண்டு பையோ-மீத்தனேஷன் (Bio-Methanation Process) முறையில் அங்கு உருவாகும் காய்கறி கழிவுகளின் எடையிற்கேற்ப 3 மெட்ரிக் டன் / 5 மெட்ரிக் டன் / 10 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மின்சாரம் தயாரிக்கும் (Waste-to-Energy Plant) அமைப்புகளை இம்மாநகராட்சி நிதி மூலமோ அல்லது தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடனோ நிறுவி செயல்படுத்த மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மேலும் மேற்படி மாமன்ற தீர்மானத்தில் முதற்கட்டமாக பரிட்ஷார்த்த முறையில் கவுண்டம்பாளையம் பகுதியில் புதிய மார்கெட் வளாகம் அமையும் பகுதியில் ஒரு அமைப்பினை ஏற்படுத்தலாமெனவும் அதன் தொடர்ச்சியாக மற்ற இடங்களிலும் அமைப்புகளை நிறுவலாமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கவுண்டம்பாளையம் பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவிலான மின்சாரம் தயாரிக்கும் (Bio-Methanation cum Power Generation Plant) அமைப்பினை கட்டும் பணிக்கு கடந்த 18-07-2013 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி (E-tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒரு நிறுவனம் பங்கு பெற்று தங்களது ஒப்பந்தப்புள்ளியை இணையதளத்தில் ஏற்றம் செய்யாததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்க வேண்டியதாயிற்று. இதனைத்தொடர்ந்து மேற்கூறிய பணிக்கு இரண்டாம் அழைப்பாக கடந்த 18-09-2013 ல் இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்தனர்.

1) தி/ள்.சுந்தரம் பேப், நாமக்கல்.
2) தி/ள்.மயிலகம் இன்ஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே

மேலே படிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கடந்த 15-10-2013 அன்று கூடி விவாதித்து மேற்படி இரண்டு நிறுவனங்களும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை திறக்கலாமென பரிந்துரை செய்தமைக்கு ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 21-10-2013 அன்று திறக்கப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் கொடுத்துள்ளனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒரு நாளுக்கு 5 டன் பயோ மீத்தனேசன் கம் மின்சார உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கட்டுமானத்தை நிறுவ மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் | 7 வருடங்களுக்கான பயோ மீத்தனேசன் கட்டமைப்பு பராமரிப்பு கட்டண மதிப்பீடு ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | தி/ள்.சுந்தரம் பேப், நாமக்கல் | 92,50,000.00 | 73,15,000.00 |
| 2. | தி/ள்.மயிலகம் இன்ஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே | 89,75,000.00 | 72,11,800.00 |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தி/ள்.மயிலகம் இன்ஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே ஒரு நாளுக்கு 5 டன் பயோ மீத்தனேசன் கம் மின்சார உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கட்டுமானத்தை நிறுவ மதிப்பீட்டுத் தொகை ரூ.89,75,000/- மற்றும் 7 வருடங்களுக்கான பயோ மீத்தனேசன் கட்டமைப்பை பராமரிப்பு கட்டண மதிப்பீடு ரூ72,11,800/-க்கு குறைவாக கொடுத்திருந்ததை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 06-11-2013 அன்று கூடி விவாதித்து விலைப்புள்ளி குறைவாக கொடுத்த தி/ள்.மயிலகம் இன்ஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், பூனே நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:2684/2013/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 279 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

**பொருள்:** கோயம்புத்தூா் மாநகராட்சி – வருவாய் பிரிவு - சொத்துவரி – புதிய வரிவிதிப்புகள் / கூடுதல் கட்டிடங்கள் / உபயோக மாற்றம் செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள்-ஆய்வு செய்தல்- அனைத்து உதவி வருவாய் அலுலா்கள் மற்றும் வரிவசூலா்களுக்கு Tablet PC வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் வேண்டுதல் - தொடா்பாக.

------

கோயம்புத்தூா் மாநகராட்சியில் வரிவசூலா்களால் புதிய வரிவிதிப்பு செய்யப்பட வேண்டிய கட்டிடங்கள், கூடுதலாக கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்கள், உபயோக மாற்றம் செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் முதலிய கட்டிடங்களை அளவீடு செய்து கோயம்புத்தூா் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 126ன்படி, வரிவிதிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

சொத்து வரிவிதிப்பு செய்ய தற்போது நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகின்ற முறையில் வரிதாரா்களுக்கு ஏற்படும் காலவிரயம் மற்றும் வரிவசூலா்களின் பணிச்சுமை போன்றவைகளை கூடுமானவரை குறைக்கும் வகையில், நவீனமுறையில் Tablet PC கருவியினை உபயோகித்து மிக எளிய முறையில் உடனுக்குடன் கட்டிடங்களை படம் எடுத்தும், கட்டிடத்தின் அளவீடுகளை கள ஆய்வு செய்தும், அளவீடு செய்யும் சமயத்திலேயே இந்த Tablet PC கருவியில் பதிவு செய்து நடவடிக்கை தொடரவும் ஏதுவாக அனைத்து வரிவசூலா்களுக்கும், உதவி வருவாய் அலுவலா்களுக்கும் Tablet PC வாங்கி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

மேலும், Tablet PC வழியாக கட்டிடங்களை புகைப்படம் எடுத்து கணினியில் பதிவிறக்கம் செய்து பராமரிக்கவும், உரிய உத்திரவுகளை கணினி வழியாகவே வழங்கி பராமரிக்கவும் ஏதுவாக மென்பொருள் தயாரிக்க தகுதிவாய்ந்த நிறுவனங்களின் உதவியுடன் இப்பணியினை செயலாக்கம் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 11083/2013/எம்.ஏ1

## மாநகர மன்ற தீா்மானம் எண் 280 நாள் 14.11.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 1- துடியலூா் பகுதியில் உள்ள இரயில் நிலையத்தில் இரயிலை நிறுத்தி எடுத்து செல்ல தேவையான அடிப்படை வசதிகள் செய்வதற்கு உண்டான திருத்திய செலவு தொகை ரூ.44,00,428/-ஐ மாநகராட்சி ஏற்றுக் கொள்வது - ஒப்புதல் கடிதம் வழங்குதல் - சம்பந்தமாக.

பாா்வை :
1. Divisional Commercial Manager, தென்னக இரயில்வே சேலம் அவா்களின் கடிதம் எண் SA/C. 210/ Thudiyalur /12 நாள் 10.10.2012 மற்றும் 03.01.2013.
2. கோயம்புத்தூா் மாநகராட்சி மாமன்றத் தீா்மானம் எண் 340 நாள் 31.01.2013.
3. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்759/2012/அ12(வ) நாள் 29.07.13.
4. Divisional Commercial Manager, தென்னக இரயில்வே சேலம் அவா்களின் கடிதம் எண் SA/C. 210/ TH/13 நாள் 04.10.2013.

************

கோயம்புத்தூா் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வாா்டு எண் 1 துடியலூா் பகுதியில் உள்ள இரயில் நிலையத்தில் இரயிலை நிறுத்தி எடுத்து செல்ல ஷ்ரம்தான் (Shramdhan) திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகளான குடிநீா் வசதி, கழிவறை, 100 சதுர அடி அளவுள்ள ஸ்டேசன் மாஸ்டா் அறை மற்றும் இரயில் நின்று செல்லும் பிளாட்பாா்ம் சமன்படுத்துதல் ஆகிய பணிகளை உள்ளாட்சி மூலம் செய்து தரக் கோரி தென்னக இரயில்வே துறையிடமிருந்து பாா்வை 1 ல் கண்ட கடிதங்களின் மூலம் கோரப்பட்டதன் பேரில், பாா்வை 2ல் கண்ட மாமன்றத் தீா்மனத்தில் மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு மாமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை தொடர பாா்வை 3ல் கண்ட இவ்வலுவலக கடிதம் வாயிலாக மாநகராட்சியிடமிருந்து உறுதி கடிதம் தென்னக இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டது.

பாா்வை 4ல் தென்னக இரயில்வே துறையிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்வதற்கு உண்டான செலவு தொகை (சுமாா்) ரூ.44,00,428/- (ரூபாய். நாற்பத்து நான்கு இலட்சத்து நானூற்று இருபத்தி எட்டு) வருவதாகவும் அதனை மாநகராட்சி ஏற்றுக் கொள்வதற்கு ஒப்புதல் கடிதம் வழங்குமாறும் கோரியுள்ளாா்கள்.

எனவே மேற்கண்ட செலவு தொகையினை மாநகராட்சி ஏற்றுக் கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலககுறிப்பு** : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 00759/2012/(அ12)டி1(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 281 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 16**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம், தற்சமயம் தெற்கு மண்டலம் மற்றும் மத்திய மண்டலம் பகுதிகளுக்குட்பட்ட 26 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காக்களை பொது நிதியின் கீழ் பராமரிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 140 நாள் 25.02.2011ன்படி திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி.லிட் நிறுவனத்தினருக்கு கடந்த 28.02.2011 முதல் 3 ஆண்டு காலத்திற்கு ஒராண்டு பராமரிப்பு மதிப்பீடு ரூ49.95 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு, உரிய நிபந்தனைகளுடன் பணியை மேற் கோள்ள அனுமதி வழங்கப்பட்டது. மாமன்ற தீர்மான எண் 234 நாள் 27.02.2012ன் படி இரண்டாம் ஆண்டு பணி நீட்டிப்பு அனுமதியும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற் கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

மூன்றாம் ஆண்டு நீட்டிப்பு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண் 140 நாள் 24.7.2013 ல் 31.10.2013 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காக்களையும் சேர்த்து ஒப்பந்த அடிப்படையில் பராமரிக்க எட்டு சிப்பங்களாக பிரித்து மாமன்ற தீர்மான எண் 185 நாள் 29.8.2013ன் படி 30.10.2013 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே புதிய ஒப்பந்ததாரர் பொறுப்பு ஏற்கும் வரை திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி.லிட் நிறுவனத்தினர் ஏற்கனவே ஒப்ந்தத்தின் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் பராமரிக்கும் பணி மேற் கொள்ள நீட்டிப்பு அனுமதியும், இப்பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் சமர்பிக்கபடுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண்.5753/2010/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 282 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 17**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம், தற்சமயம் கிழக்கு மண்டலம், தெற்கு மண்டலம் மற்றும் வடக்கு மண்டலம் பகுதிகளுக்குட்பட்ட 30 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காகளை பொது நிதியின் கீழ் பராமரிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழவின் தீர்மான எண் 140 நாள் 25.02.2011ன்படி திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி.லிட் நிறுவனத்தினருக்கு கடந்த 28.02.2011 முதல் 3 ஆண்டு காலத்திற்கு ஒராண்டு பராமரிப்பு மதிப்பீடு ரூ46 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு, உரிய நிபந்தனைகளுடன் பணியை மேற் கோள்ள அனுமதி வழங்கப்பட்டது. மாமன்ற தீர்மான எண் 233 நாள் 27.02.2012ன் படி இரண்டாம் ஆண்டு பணி நீட்டிப்பு அனுமதியும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற் கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

மூன்றாம் ஆண்டு நீட்டிப்பு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண் 141 நாள் 24.7.2013 ல் 31.10.2013 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காக்களையும் சேர்த்து ஒப்பந்த அடிபடையில் பராமரிக்க எட்டு சிப்பங்களாக பிரித்து மாமன்ற தீர்மான எண் 185 நாள் 29.8.2013ன் படி 30.10.2013 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே புதிய ஒப்பந்ததாரர் பொறுப்பு ஏற்கும் வரை திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி.லிட் நிறுவனத்தினர் ஏற்கனவே ஒப்ந்தத்தின் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் பராமரிக்கும் பணி மேற் கொள்ள நீட்டிப்பு அனுமதியும், இப்பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் சமர்பிக்கபடுக்கிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண்.8414/2010/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 283 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 18**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், தற்சமயம் மேற்கு மண்டலம், மற்றும் தெற்கு மண்டலம் பகுதிகளுக்குட்பட்ட 36 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காகளை பொது நிதியின் கீழ் பராமரிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழவின் தீர்மான எண் 140 நாள் 25.02.2011ன்படி திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி.லிட் நிறுவனத்தினருக்கு கடந்த 28.02.2011 முதல் 3 ஆண்டு காலத்திற்கு ஓராண்டு பராமரிப்பு மதிப்பீடு ரூ49.35 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு, உரிய நிபந்தனைகளுடன் பணியை மேற் கோள்ள அனுமதி வழங்கப்பட்டது. மாமன்ற தீர்மான எண் 236 நாள் 27.02.2012ன் படி இரண்டாம் ஆண்டு பணி நீட்டிப்பு அனுமதியும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற் கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

மூன்றாம் ஆண்டு நீட்டிப்பு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண் 143 நாள் 24.7.2013 ல் 31.10.2013 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காக்களையும் சேர்த்து ஒப்பந்த அடிபடையில் பராமரிக்க எட்டு சிப்பங்களாக பிரித்து மாமன்ற தீர்மான எண் 185 நாள் 29.8.2013ன் படி 30.10.2013 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே புதிய ஒப்பந்ததாரர் பொறுப்பு ஏற்கும் வரை திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி.லிட் நிறுவனத்தினர் ஏற்கனவே ஒப்ந்தத்தின் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் பராமரிக்கும் பணி மேற் கொள்ள நீட்டிப்பு அனுமதியும், இப்பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் சமர்பிக்கபடுக்கிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம். ந.க.எண்.6120/2010/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 284 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 19**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம், தற்சமயம் வடக்கு மண்டலம், கிழக்கு மண்டலம் மற்றும் மத்திய மண்டலம் பகுதிகளுக்குட்பட்ட 24 எண்ணிக்கையிலான மாநகராட்சி பூங்காகளை பொது நிதியின் கீழ் பராமரிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழவின் தீர்மான எண் 140 நாள் 25.02.2011ன்படி திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி.லிட் நிறுவனத்தினருக்கு கடந்த 28.02.2011 முதல் 3 ஆண்டு காலத்திற்கு ஓராண்டு பராமரிப்பு மதிப்பீடு ரூ44.70 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு, உரிய நிபந்தனைகளுடன் பணியை மேற் கோள்ள அனுமதி வழங்கப்பட்டது. மாமன்ற தீர்மான எண் 235 நாள் 27.02.2012ன் படி இரண்டாம் ஆண்டு பணி நீட்டிப்பு அனுமதியும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற் கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

மூன்றாம் ஆண்டு நீட்டிப்பு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண் 142 நாள் 24.7.2013 ல் 31.10.2013 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காக்களையும் சேர்த்து ஒப்பந்த அடிபடையில் பராமரிக்க எட்டு சிப்பங்களாக பிரித்து மாமன்ற தீர்மான எண் 185 நாள் 29.8.2013ன் படி 30.10.2013 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே புதிய ஒப்பந்ததாரர் பொறுப்பு ஏற்கும் வரை திருவாளர்கள் திரிஷா ரோஸ் கார்டன் பி.லிட் நிறுவனத்தினர் ஏற்கனவே ஒப்ந்தத்தின் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தில் பராமரிக்கும் பணி மேற் கொள்ள நீட்டிப்பு அனுமதியும், இப்பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் சமர்பிக்கபடுக்கிறது.

**அலுவலகக்குறிப்பு** :- அனுமதிக்கலாம். ந.க.எண்.9392/2010/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 285 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

### பொருள் எண் 20

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சி எருதுகள் - தனியார் மூலம் பாதுகாத்தல் - அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

---------

மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் குப்பைகளை அகற்றப்பயன்படுத்தும் வயதான மற்றும் வேலைத்திறன் அற்ற எருதுகளை கோயம்புத்தூர், பொள்ளாச்சி ரோட்டில் அமைந்துள்ள தங்களது நிறுவனமான Coimbatore Animal Welfare Society, ஸ்ரீ பகவான் மஹாவீர் கோச்சலா, நிறுவனத்தின் மூலம் பராமரித்துக்கொள்வதாக தெரிவித்துள்ளனர். மேலும் இதுபோன்ற விலங்குகளை தாங்கள் சேவை மனப்பான்மையோடு தனிக்கவனம் செலுத்தி எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி பராமரித்து வருவதாகவும் எனவே தங்களது நிறுவனத்தை நேரில் வந்து பார்வையிட்டு பிறகு எருதுகளை ஒப்படைக்கக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மாநகராட்சியில் தற்போது மொத்தம் 46 எருதுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் 6 எருதுகள் வயதான நிலையில் உள்ளன. மேலும் 40 வயதான எருதுகள் பயன்பாட்டில் உள்ளன. இந்த எருதுகளுக்கு ஒரு வருடத்திற்கு சுமார் ரூ. 21,16,000/- செலவினம் ஏற்படுகின்றன.

எனவே மாநகராட்சி எருதுகளை Coimbatore Animal Welfare Society, ஸ்ரீ பகவான் மஹாவீர் கோச்சலா, கோயம்புத்தூர் நிறுவனத்தாரிடம் ஒப்படைப்பு செய்து அவர்கள் மூலம் பராமரிப்பு செய்வது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 12748/2009/எம்.இ4

### மாநகர மன்ற தீர்மானம் எண் 286 நாள் 14.11.2013

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

### பொருள் எண் 21

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை – 5, 6 மற்றும் 7வது வார்டுகளில் சாக்கடைப் பணியாளர்களின் பணிகள் - தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டது – 31.07.2013 உடன் முடிவடைதல் - மேற்படி பணிக்காலம் 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்வது – மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்தில் வார்டு எண் 5, 6 மற்றும் 7 ஆகிய பகுதிகளில் சாக்கடை தூர்வாரும் பணிக்கு தி/ள். ஸ்ரீ ஸ்ரீனிவாசா இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் , கோவை நிறுவனத்தார் மூலம் ஒப்பந்தம் அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு 01.12.2012 முதல் 31.07.2013 வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.07.2013 உடன் முடிவடைந்ததால் மாமன்ற தீர்மான எண் 193 நாள் 19.09.2013-ன்படி இப்பணிக்காலம் 31.10.2013 வரை காலநீட்டிப்பு பெறப்பட்டு ஒப்பந்தகாலம் 31.10.2013 வரை கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டடிருந்தது.

தற்போது இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு காலதாமதம் ஆகும் என்ற காரணத்தால் இப்பணி காலத்தை 31.12.2013 வரை காலநீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 8310/2013/எம்.டி1 (எம்இ8)

### மாநகர மன்ற தீர்மானம் எண் 287 நாள் 14.11.2013

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

### பொருள் எண் 22

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை – 8 மற்றும் 9வது வார்டுகளில் சாக்கடைப் பணியாளர்களின் பணிகள் - தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டது – 31.07.2013 உடன் முடிவடைதல் - மேற்படி பணிக்காலம் 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்வது – மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது - தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்தில் வார்டு எண் 8 மற்றும் 9 ஆகிய பகுதிகளில் சாக்கடை தூர்வாரும் பணிக்கு தி/ள். ஸ்ரீ ஸ்ரீனிவாசா இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் , கோவை நிறுவனத்தார் மூலம் ஒப்பந்தம் அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு 01.12.2012 முதல் 31.07.2013 வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.07.2013 உடன் முடிவடைந்ததால் மாமன்ற தீர்மான எண் 193 நாள் 19.09.2013-ன்படி இப்பணிக்காலம் 31.10.2013 வரை காலநீட்டிப்பு பெறப்பட்டு ஒப்பந்தகாலம் 31.10.2013 வரை கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டடிருந்தது.

தற்போது இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு காலதாமதம் ஆகும் என்ற காரணத்தால் இப்பணி காலத்தை 31.12.2013 வரை காலநீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 8311/2013/எம்.டி1 (எம்இ8)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 288 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 23**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு – வடக்கு மண்டலம் வார்டு எண்.41க்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட காந்திமாநகர் மனைப்பிரிவில் சமுதாய கூடம் மற்றும் இடத்தினை குறைந்த வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் மாநகராட்சிக்கு ஒப்படைக்க பிரேரணை அனுப்பப்பட்டது – மேற்படி இடத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிர்ணயம் செய்த விற்பனை விலை ரூ.5,13,38,000/- க்கு மாநகராட்சி பெயரில் கிரயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை:** திரு.சி.நடராஜன், மாமன்ற உறுப்பினர் வார்டு எண்.41, அவர்களின் கடிதம் நாள்.11.11.2013.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண்.41க்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கணபதி கிராமம், க.ச.எண்கள்.26,27,28 பாகம், 29-39, 48,49, 50, 52, 53, 54, 55/2பி மற்றும் 40/2, 43/2, 45,46,47 ல் அமைக்கப்பட்ட காந்திமாநகர் பேஸ்- I, II மற்றும் III மனைப்பிரிவில் உள்ள சமுதாய கூடம் மற்றும் இடத்தினை குறைந்த வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் மாநகராட்சிக்கு ஒப்படைக்க மாமன்ற தீர்மானம் எண்.217, நாள்.24.09.2012 நிறைவேற்றப்பட்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு பிரேரணை அனுப்பப்பட்டது. தற்போது பார்வையில் காண் 41 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.சி.நடராஜன் அவர்கள் கடிதத்தில், மேற்படி இடத்தினை மாநகராட்சி பெயரில் நிலக்கிரயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர கேட்டு கொண்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்படி சமூக நலக் கூடத்துடன் கூடிய நிலத்திற்கான விற்பனை விலை ரூ.5,13,38,000/- (ஐந்து கோடியே பதிமூன்று லட்சத்து முப்பத்து எட்டாயிரம்) என நிர்ணயம் செய்துள்ளதாகவும், மேற்படி தொகையினை செலுத்தி நிலக்கிரயம் செய்து கொள்வதற்கு சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் சமுதாய நலக் கூட இடத்தினை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என கடிதம் வரப்பட்டு உள்ளது.

எனவே, மேற்படி இடத்தினை நிலக்கிரய தொகை ரூ.5,13,38,000/- தொகை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தி மாநகராட்சி பெயரில் நிலக்கிரயம் செய்யவும் அதற்கான பிரேரணை அரசுக்கு அனுப்பவும் மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- மாமன்றத்தின் முடிவுக்காக. ந.க.எண்.620 /2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 289 நாள் 14.11.2013**

பொருளை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - பிரதான அலுவலக வளாகம் அம்மா மூலிகை உணவகம் நடத்துதல் - செலவினங்கள் - முன்பணம்-வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 153 நாள் 29.08.2013. -ன் வாயிலாக இம்மாநகராட்சியில் பிரதான அலுவலகத்திற்கு வந்து செல்லும் பொதுமக்களின் ஆரோக்கியம், சுகாதாரம், நோய்தடுப்பு போன்ற நல்லெண்ணங்களின் அடிப்படையில் பிரதான அலுவலக வளாகத்தினுள் ‘‘அம்மா மூலிகை உணவகம்’’ தொடங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஸ்ரீ கங்கை விநாயகா மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு மூலிகை உணவுகள் தயாரிப்பது தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு மூலிகை உணவகம் தொடங்க நிபந்தனைகளுடன் கூடிய பணிஉத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் உணவகத்திற்குத் தேவையான உபகரணங்கள் ரூ. 2,16,434/- க்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளது. மூலிகை உணவுகள் தயாரிப்பதற்கான மூலிகை பொருட்கள் மற்றும் மளிகை பொருட்கள் வாங்க ரூ. 60,000/- உதவி மாநகர நல அலுவலர் மூலம் முன்பணம் பெற்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 2,76,434/-யை தினசரி ரூ. 750/- வீதம் திருப்பி செலுத்த மேற்படி குழுவிற்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சி பணியாளர்கள், பிரதான அலுவலகத்திற்கு வருகை தரும் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து பொது மக்களின் நலன் கருதி மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் ‘‘அம்மா மூலிகை உணவகம்’’ செயல்படுத்திட மேற்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொண்ட செலவினங்களுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 4089/ 2013/ எம்இ2

### மாநகர மன்ற தீர்மானம் எண் 290 நாள் 14.11.2013

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

| | |
|---|---|
| பொருள் | காசநோய் - மருந்தகங்கள் மற்றும் நகர் நல மையங்கள் - மருந்துகள் வாங்க வரும் காசநோயாளிகள் - பால் , முட்டை அல்லது சுண்டல் வழங்குவது - தொடர்பாக. |

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சிகிச்சைக்கு வரும் காசநோயாளிகளுக்கு நகர் நல மையங்களில் மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை இரண்டு வகையாக பிரிக்கப்பட்டு (Corpn I, Corpn II ) காசநோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது.

| RNTCP Corpn - I | | RNTCP Corpn - II | |
|---|---|---|---|
| 1 | டி.பி.ரோடு மருந்தகம் | 1 | சிங்காநல்லூர் மையம் |
| 2 | காந்திபுரம் மருந்தம் | 2 | இராமநாதபுரம் மருந்தகம் |
| 3 | செல்வபுரம் மருந்தகம் | 3 | பீளமேடு மையம் |
| 4 | இராமலிங்கம் காலனி மருந்தகம் | 4 | கெம்பட்டி காலனி மருந்தகம் |
| 5 | பி.என்.பாளையம் மருந்தகம் | 5 | சி.எம்.சி. மருத்துவமனை |

மேற்கண்ட மருந்தகம் மற்றும் நகர் நல மையங்களுக்கு மருந்துகள் வாங்க ஒரு நாளைக்கு சுமார் 400 காச நோயாளிகள் வருகை தருகிறார்கள். இவர்களுக்கு வாரத்தில் 3 நாட்கள் வீதம் 6 மாதங்கள் (72 நாட்கள்) சிகிச்சை அளிக்கப்பட வேண்டியுள்ளது. இவர்களின் உடல் நலன் கருதி வருகை தரும் காச நோயாளிகளுக்கு பால், முட்டை போன்றவற்றையும், முட்டை சாப்பிடாதவர்களுக்கு சுண்டல் வழங்கவும், இதற்கான செலவினம் 1 நாளைக்கு 1 நபருக்கு ரூ.25/-வீதம், 400 நபர்களுக்கு, ஓராண்டுக்கு ரூ.14.40 இலட்சம் (400 x 72 x 25 x 2) செலவினத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமாப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் 11184 / 2013/ எம்.இ.2

### மாநகர மன்ற தீர்மானம் எண் 291 நாள் 14.11.2013

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 26**

| | |
|---|---|
| பொருள் | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – நகா்நல மையங்களில் கா்ப்பகால பரிசோதனைக்கு வரும் தாய்மாா்களுக்கு உடற்பயிற்சி வழங்க முடக்கு நீக்குவியல் (Physiotherapist) நிபுணா் ஒருவரை வாடகை அடிப்படையில் நியமனம் செய்து – மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடா்பாக |

கோயம்புத்தூா் மாநகராட்சியின் கீழ் இயங்கி செயல்பட்டு வரும் 20 நகா்நல மையங்களில் வாரந்தோறும் செவ்வாய்கிழமைகளில் கா்ப்பகால பரிசோதனைக்கென வரும் கா்ப்பிணி தாய்மாா்களுக்கு அவா்களின் உடல் ஆரோக்கியத்தை சீராக பராமரிக்கவும், பிரசவத்திற்கு முன்னும், பின்னும் கா்ப்பப்பை தசைகள் வலுவிழந்து காணப்படுவதாலும், தசைகள் மற்றும் கா்ப்பப்பை கீழே இறங்கிவிடாமலும் Hernia போன்ற தசை இறக்கம் ஏற்படாமலும் இருக்க உடற்பயிற்சி அவசியம் தேவைப்படுகிறது.

எனவே, 20 நகா்நல மையங்களுக்கு வரும் கா்ப்பிணி தாய்மாா்களுக்கு உடற்பயிற்சி வழங்க முடக்குவியல் (Physiotherapist) நிபுணா் ஒருவரை மாதம் ரூ. 12,000/-ல் (ரூபாய் பன்னிரண்டாயிரம்) வாடகை அடிப்படையில் பணிக்கு அமா்த்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் 10620 / 2013/ எம்.இ.2

**மாநகர மன்ற தீா்மானம் எண் 292 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 27**

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூா் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வாா்டு எண் 1 – துடியலூரில் கோயம்புத்தூா் மாநகராட்சியால் புதிதாக புனரமைக்கப்பட்ட நவீன எரியூட்டு மயானத்தினை பராமரிக்க தனியாா் நிறுவனத்திற்கு அனுமதி வழங்குதல் சம்பந்தமாக நகராட்சி நிா்வாக ஆணையருக்கு கருத்துரு சமா்ப்பித்தல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடா்பாக |
| பாா்வை | 1.தி.ள். ஈஷா பவுண்டேஷன், கோயம்புத்தூா் அவா்களின் கடிதம் நாள் 12.11.2013<br>2.அரசாணை (நிலை) எண் 228, நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (நநி3) துறை நாள் 13.11.2008 |

கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு உட்பட்ட வடக்கு மண்டலம், வாா்டு எண் 1 துடியலூா் பகுதியில் இருந்த மயானம் புதிதாக நவீன எரியூட்டு மயானமாக புனரமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மயானத்தினை பராமரிப்பதற்கும், இயக்குவதற்கும் தனியாா் தொண்டு நிறுவனமான தி.ள். ஈஷா பவுண்டேஷன் அவா்கள், பாா்வை 1-ல் கண்ட கடிதத்தில் இசைவு தெரிவித்துள்ளாா்கள். பாா்வை 2-ல் கண்ட அரசாணையில் உள்ளாட்சி செலவில் கட்டிமுடிக்கப்பட்ட நவீன எரிவாயு தகன மேடையை பராமரிக்க தனியாா் அறக்கட்டளை மற்றும் தனியாா் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு நகராட்சி நிா்வாக ஆணையருக்கு அதிகாரம் வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மயானத்தினை பராமரிப்பதற்கும், இயக்குவதற்கும் தனியாா் தொண்டு நிறுவனமான தி.ள். ஈஷா பவுண்டேஷன், கோயம்புத்தூா் அவா்களுக்கு அரசாணை (நிலை) எண். 228, நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (நநி3) துறை நாள் 13.11.2008 ல் கண்டுள்ள நிபந்தனைகளின்படி அனுமதி வழங்க நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் உத்திரவு பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க. எண் 6700/ 2013/ (எம்.இ.4) டி1 (வ)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 293 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 28**

| | |
|---|---|
| பொருள் | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பட்டம் பெற்று கீழ்நிலை பதவிகளில் பணியாற்றும் பணியாளர்களை – உதவிப் பொறியாளர் பணியிடத்தில் நேரடி நியமனம் மூலம் அரசின் உறுதியாக்கத்திற்குப்பட்டு நியமனம் செய்வது – தொடர்பாக. |

——————

அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள். 30.04.2001ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் உதவிப்பொறியாளர்/தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு நேரிடை நியமனம் செய்யம் போது பொறியியல் பட்டம் பெற்று கீழ்நிலைப் பதவிகளில் (தொழில்நுட்ப உதவியாளர், தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை I மற்றும் தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை II) பணியாற்றும் பணியாளர்களை நியமனம் செய்யப் பரிசீலிக்கலாம் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண். 209, நாள். 11.06.2001 மற்றும் மாமன்ற தீர்மான எண். 160, நாள். 11.06.2001ன் படி நான்கு நபர்கள் இம்முறையில் உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டு 20.06.2001 முதல் பணிபுரிந்து வருகின்றனர்.

இதேபோன்று கோயம்புத்தூர் மாநகராட்சியில் கீழ்நிலைப் பதவிக்களுக்கான (தொழில்நுட்ப உதவியாளர், தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை I மற்றும் தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை II) பணிமூப்புப் பட்டியலின்படி உதவிப் பொறியாளர்களுக்கான கல்வித் தகுதியான பொறியியல் பட்டம் முடித்து தற்போது பணியாற்றி வரும் பணியாளர்களின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | கல்வித் தகுதி | பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1 | திருமதி. எஸ். சரண்யா,<br>தொழில் நுட்ப உதவியாளர். | பி. இ (Computer Hardware and Software Engineering) | 28.01.2008 |
| 2 | திருமதி. பி. விமலா,<br>தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை II | பி. இ (சிவில்) | 23.02.2006 |
| 3 | திரு. ஆர். முத்துக்குமார்,<br>தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை II | பி. இ (சிவில்) | 23.02.2006 |
| 4 | திரு. கே. ரமேஷ்<br>தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை II | பி. இ (சிவில்) | 23.02.2006 |

வரிசை எண்.1ல் உள்ள பணியாளர் மீது மாநகராட்சி ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 8(2)ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு (ந.க.எண்.11255/2011/எம்.சி.1, நாள்.15.10.2012) இறுதி உத்திரவாக இவரது வளரூதியத்தினை திரண்ட பயனின்றி ஒரு வருடத்திற்கு ( 01.01.2013 முதல் 31.12.2013 வரை) நிறுத்தி வைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணியாளர் 31.12.2013 வரை பதவி உயர்வு பெற தகுதியற்றவராகிறார்.

எனவே தற்போது காலியாக உள்ள 5 உதவி / இளம் பொறியாளர் பணியிடங்களில் மேற்குறிப்பிட்டுள்ள அரசாணை மற்றும் மாமன்றத் தீர்மானங்களின் அடிப்படையில் இம்மாநகராட்சி பணியமைப்பு விதிகளின்படி நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு முறையே 3 : 1 என்ற விகிதாச்சாரத்தின்படி வரிசை எண். 2 முதல் 4 வரை உள்ள பணியாளர்களை உதவிப் பொறியாளர் பதவியில் நேரடி நியமன அடிப்படையில் நியமனம் செய்ய பரிந்துரை செய்து அரசிற்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 3537/2013/எம்சி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 294 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

————————————————————————————————

**பொருள் எண் 29**

**பொருள்** திடக்கழிவு மேலாண்மை – கோயம்புத்தூர் மாநகராட்சி – பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து மறு சுழற்சி மூலம் சுற்றுசூழக்கு ஏற்ற பொருட்கள் தயாரிப்பது தகுதிவாய்ந்த நிறுவனங்களை தேர்ந்தெடுக்க விருப்ப கேட்வு அறிக்கை பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தினசரி 800 டன் முதல் 900 டன் வரை குப்பைகள் உற்பத்தியாகின்றது. இதில் சுமார் 8 சதவீதம் குப்பை பிளாஸ்டிக் ஆக உள்ளது. பிளாஸ்டிக் கலந்த குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதற்கு பொதுமக்களிடையே இன்னும் முழுமையாக விழிப்புணர்வு இல்லாததால் வெள்ளலூர் குப்பை கிடங்கில் உரம் தயாரிப்பது மிகவும் குறைவாக உள்ளது. தற்போது மாநகராட்சி பகுதி வார்டு எண். 23ல் சூன்யா திட்டத்தின் மூலம் பிளாஸ்டிக்கினை தனியாக தரம்பிரித்து பரிச்சார்த்த முறையில் சிறப்பான முறையில் பெறப்படுகின்றது. இந்த முறையில் மேலும் பல வார்டுகளை இணைத்து பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக பெற்று தனியார் நிறுவனத்திற்கு வழங்கி பிளாஸ்டிக்கினை மறுசுழற்சி செய்து சுற்று சூழலுக்கு ஏற்ற வண்ணம் பொருட்கள் தயாரிக்க வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் மாநகராட்சிக்கு வருவாய் பெறுவதுடன் பிளாஸ்டிக்கினை வெள்ளலூர் உரகிடங்கிற்கு எடுத்து செல்வது முற்றிலும் குறையும். இதன் மூலம் அப்பகுதியில் சுற்றுசூழல் மேம்படுத்தப்பட்டு மாசுபடுவது முற்றிலும் கட்டுப்படுத்தப்படும் .

மேற்படி பணியினை செயல்படுத்திட உரிய நிறுவனங்களை தேர்வு செய்ய விருப்பு கேட்பு அறிக்கை பெற மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11146/2013/ஜே.என்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 295 நாள் 14.11.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி